விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 05 செவ்வாய்க்கிழமை (21.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 276

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

## நீண்டகாலம் தடுப்பிலுள்ள தமிழ் இளைஞர்களை

# பொதுமன்னிப்பில் விடுவிக்க தயங்கப் போவதில்லை



### ஐ.நா பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி கோட்டா

*(நியூ யோர்க்)*

**நீண்டகாலம் தடுப்பிலுள்ள தமிழ் இளைஞர்களை ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் பேரில் அவர்களை விடுவிப்பதற்கு தான் தயங்கப் போவதில்லை என ஐ.நா பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.** (15ஆம் பக்கம் பார்க்க)

காணாமலாக்கப்பட்டோருக்கு

## மரணச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை

ஐ.நா செயலாளரிடம் ஜனாதிபதி

*(நியூ யோர்க்)*

**நாட்டில் காணாமலாக்கப்பட்டோருக்கு மரணச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ.நா பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதிக்கும் ஐ.நா பொதுச் செயலாளருக்கும் ▶15

## உள்ளக பொறிமுறையினூடாக பிரச்சினை பேசித் தீர்க்கப்பட வேண்டும்

புலம்பெயர் தமிழர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

(நியூயோர்க்)

இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகள், நாட்டுக்குள்ளேயே உள்ளகப் பொறிமுறையினூடாகத் தீர்க்கப்பட வேண்டுமென்றும் அதற்காக, புலம்பெயர் தமிழர்களுடனான பேச்சுவார்த்தைக்குத் தான் அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைத் ▶15

யாழ்.போதனா வைத்தியசாலையில்

## குழந்தை பிரசவித்த தாய் கோவிட்டால் மரணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குழந்தை பிரசவித்த இளம் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். ▶15

## இணுவிலில் வாள்வெட்டு

இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இணுவில் - காரைக்கால் பகுதியில் வீதியில் நின்ற இளைஞர்கள் மீது வாள்வெட்டுக் குழு ▶15

நாட்டில் மேலும்

## 93 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் ▶15

## கிளிநொச்சியில் கோவிட்டால் உயிரிழந்தவரின் சடலத்தை வீட்டுக்கு கொண்டு சென்று அஞ்சலி

விசாரணையை ஆரம்பித்தது சுகாதார தரப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கோவிட் தொற்றினால் உயிரிழந்தவரை அவருடைய வீட்டிற்குக் கொண்டு சென்று மக்கள் அஞ்சலி செய்ய அனுமதித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் விசாரணை நடத்த சுகாதாரத் தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி உதயநகர் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த முன்னாள் கிராம ▶15

கொரோனா

## +1,509

(கொழும்பு)

நாட்டில் மேலும் 1,509 கோவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் ▶15

## பொறுப்பற்று செயற்பட்டால் கொரோனா தீவிரமடையும்

சுகாதார அமைச்சு எச்சரிக்கை



(கொழும்பு)

பொதுமக்கள் தொடர்ந்து பொறுப்பற்று செயற்பட்டால் கொரோனா மீண்டும் நாட்டில் தீவிரமடையும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ▶15

கோண்டாவிலில்

## மரணமான பெண்ணுக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் வடக்கில் உயிரிழந்த 80 வயது பெண்ணுக்க ▶15

## ஐ.நாவின் ஒத்துழைப்பு இலங்கைக்கு கிடைக்கும்

ஐ.நா செயலாளர் தெரிவிப்பு

(நியூயோர்க்)

இனங்களுக்கிடையில் ஒற்றுமையை பலப்படுத்தி முன்னோக்கி நகர்வதற்கான முழுமையான ஒத்துழைப்பை ஐ.நா வழங்கும் என ஐ.நா பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் கோட்டாவிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் ▶15

# வவு. நகர சபை உறுப்பினர் கோவிட்டால் உயிரிழப்பு

(வவுனியா )

வவுனியா நகர சபை உறுப்பினர் ஒருவர் கோவிட் தொற்றுக்காரணமாக நேற்று மரணமடைந்துள்ளார்.

கடந்த உள்ளூராட்சிமன்றத்தேர்தலில் வவுனியா நகர சபைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்டிருந்த தேக்கவத்தையில் வசித்து வரும் திருமதி த.புஞ்சிகுமாரி என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

(ம-03,250,299)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 30 . 10 . 1930

உதிர்வு 26 . 09 . 2018

அமரர் இராசம்மா சேனாதிராசா

( திதி : 21.09.2021 )

நீங்கள் தந்த நீங்கா நினைவுகளை
எம் இறுதி மூச்சுவரை சுமந்து
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

" சாய் இல்லம் "
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

(7-7678)

குடும்பத்தினர்



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



காரைநகர் மேற்கு, கள்ளித்தெரு
தங்கோடையைப் பிறப்பிடமாகவும்
3ஆம் கட்டை, கல்வியங்காட்டை
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

இராஜேஸ்வரி நாகலிங்கம்

கண்ணிமைக்கும் பொழுதினிலே காலனவன்
காற்றாய் கொண்டு சென்ற தென்ன
முப்பத்தொருநாள் ஆன போதும்
ஆறுமோ எம் துயரம்

அம்மா... அம்மா... அம்மா...
என்ற சொல்லுக்கே ராணியம்மா நீ
கண்ணீரில் கரைகின்றோம் காலங்கள் கடந்தாலும்
கரையாது உன் நினைவுகள் அன்புத் தாயே !

முப்பத்தொருநாள் ஆனாலும்
துவண்டு நிற்கின்றோம் உன் விழிதேடி
எம் உயிருடன் ஒன்றாய்
கலந்து விட்ட எங்கள் தெய்வமே !

உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும் தொலைநகல், மின்னஞ்சல் ஆகியவை மூலமாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (20.09.2021) திங்கட்கிழமை காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் 24.09.2021 (வெள்ளிக்கிழமை) அன்று அவரது மகனின் இல்லத்தில் நடைபெறும்.

மாவடிச் சந்தி,
வட்டுக்கோட்டை.

(7944)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டி, பெறாமகன்


# வவுனியா மாவட்டத்தில் 4 கிராம அலுவலர்களுக்கு கொரோனாத் தொற்று

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நான்கு கிராம அலுவலர்கள் கோவிட் தொற்றுக்குள்ளான நிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா செட்டிகுளம் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஆண்டியாபுளியங்குளம் கிராம அலுவலர் மற்றும் விடுமுறையில் இருந்த பெண் கிராம அலுவலர் ஆகிய இருவருக்கும் அன்டிஜன் பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கனகராயன்குளம் தெற்கு மற்றும் ஊஞ்சல்கட்டி ஆகிய பிரிவு கிராம அலுவலர்களுக்கு அன்டிஜன் பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த இருவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியா வடக்கில் ஏற்கெனவே பிரதேச செயலாளர், இரு கிராம அலுவலர்கள் உள்ளிட்ட பல பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கோவிட் தொற்றுக்குள்ளாகி குணமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-03,250,299)

# 2 பிள்ளைகளின் தாயார் மல்லாவியில் சடலமாக மீட்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மல்லாவி பிரதேசத்திற்கு உட்பட்ட வடகாடு கொல்லவிளாங்குளம் பகுதியில் இரண்டு பிள்ளைகளின் தாயார் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் இனங்காணப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மல்லாவி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கணவனை பிரிந்த நிலையில் இரண்டு பிள்ளைகளுடன் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றி வரும் 31 அகவையுடைய இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை மற்றும் பிசிஆர் முடிவுகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-03)

# பாசையூரில் வீடு புகுந்து குழுவொன்று அடாவடி

## அரைமணி நேரத்தில் 7 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். பாசையூர் அந்தோனியார் கோவிலுக்கு அண்மையாக அமைந்துள்ள வீடொன்றுக்குள் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் உள்நுழைந்து அடாவடியில் ஈடுபட்டுவிட்டுத் தப்பிச் சென்ற ஏழு பேர் கொண்ட குழு குறித்த சம்பவம் நடைபெற்று அரை மணித்தியாலயத்திற்குள் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பாசையூர் அந்தோனியார் கோவிலுக்கு அண்மையாகவுள்ள வீடொன்றுக்குள் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அத்துமீறி உள்நுழைந்த ஏழு பேர் கொண்ட குழு பெறுமதியான பொருட்கள் பலவற்றை உடைத்து அடாவடியில் ஈடுபட்டதுடன் வீட்டிலிருந்தவர்களையும் அச்சுறுத்திவிட்டுத் தப்பிச்சென்றது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் அறிந்து சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில் மூன்று மோட்டார்ச் சைக்கிள்களில் பயணித்த ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து வாள் ஒன்றும் இரண்டு மரக்கட்டைகளும் கைப்பற்றப்பட்டன. கைதானவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். சந்தேகநபர்கள் பயன்படுத்திய மூன்று மோட்டார்ச் சைக்கிள்கள் உள்ளிட்ட சான்றுப் பொருட்களும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை, பாசையூர் மற்றும் மணியம்தோட்டம் பகுதிகளைச் சேர்ந்த 22 வயதுக்கும் 27 வயதுக்கும் இடைப்பட்ட ஏழு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-03,18,33)

# சிறுபான்மையினர் உரிமைகளை பாதுகாக்குமாறு ஜனாதிபதியிடம் ஐ.நா. வலியுறுத்து

**(கொழும்பு)**
**இலங்கையில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளார்.**

இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் ஐ.நா. பொதுச் சபையின் 76 ஆவது அமர் வில் பங்கேற்பதற்காக ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ நியூ யோர்க் சென்றுள்ள நிலை யில் அங்கு ஐ.நா. பொதுச் செயலா ளரைச் சந்தித்தார்.

இதன்போதே சிறுபான்மை யினரின் உரிமைகளைப் பாது காக்க வேண்டியதன் அவ சியம் குறித்து ஐ.நா.பொதுச் செயலாளர் வலியுறுத்தி னார்.

அத்துடன் கொவிட்-19 தொற்று நோய் நெருக்கடிக ளைக் கையாள்வதில் இலங் கையுடன் தனது ஒற்று மையை அவர் வெளிப்படுத்தினார்.

இலங்கையின் நல்லிணக்க செயற்பாடு உள்ளிட்ட உள் நாட்டு பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி பொதுச் செயலாள ருக்கு விளக்கினார். (நி-5)



## வீடு திரும்பினார் சிவாஜிலிங்கம்



(யாழ்ப்பாணம்)
தமிழ் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்று வீடு திரும்பியுள்ளார். கடந்த 10 ஆம் திகதி வல்வெட்டித்துறை யில் மேற் கொள்ளப்பட்ட அன் டிஜன் பரிசோதனையிலேயே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அவர் கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்தார். அவர் பூரணமாக குண மடைந்த நிலையில் நேற்று வீடு திரும்பியுள்ளார். (நி-5)

# ஐயாயிரம் ரூபாய் கொடுப்பனவு தொடர்பில் சுற்றுநிருபம் வெளியீடு

(கொழும்பு)
ஆசிரியர்களுக்கான 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்கு வது குறித்த சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதன்படி, இணைய வழி கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பாடசாலை ஆசிரியர்களுக்கு மட்டும் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களுக்காக தலா 5000 ரூபாய் கொடுப்பனவு வழங் கப்பட உள்ளது.



இது ஓர் ஊக்குவிப்பு கொடு ப்ப னவு என பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுப் பதனை ஊக்குவிக்கும் நோக் கில் இந்த சுற்று நிருபம் வெளி யிடப்படுவதாக அவர் குறிப்பிட்டு ள்ளார். (நி-5)

# பேருந்து மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கொழும்பு)
கினிகத்தேனை அனுரத்த பிரத்தமிக்க வித்தியாலத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில், இரண்டு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார்என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள் ளது.

நாவலப்பிட்டி, பெனிசுதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடைய சரத்குமார பியதாஸ என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நாவலப்பிட்டியிலிருந்து கினி கத்தேனை பகுதிக்குச் சென்ற நாவலப்பிட்டி டிப்போவுக்குச் சொந்தமான திருத்தப்பணி சேவை பேருந்து, குறித்த நபர் மீது மோதியுள்ளது.

பேருந்தின் சாரதியை நாவ லப் பிட்டி போக்குவரத்துப் பொலி ஸார் கைதுசெய்துள்ளதுடன் நாவலப்பிட்டி நீதவான் நீதிம ன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று பொலி ஸார் தெரிவித்தனர். (நி-5)

# ரஷ்ய பல்கலைக்கழகத்தில் துப்பாக்கிச்சூடு; 8பேர் பலி

(மொஸ்கோ)
ரஷ்யாவின் பெர்ம் நக ரில் உள்ள பல்கலைக்கழகத் தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் குறைந்தது எட்டு பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ள னர்.

நேற்று திங்கட்கிழமை காலை பல்கலைக்கழகத்திற் குள் நுழைந்து ஒரு மாணவன் குறித்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியாக அறிவிக்கப்பட்டுள் ளது.

இதன்போது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பல்கலைக் கழக கட்டடத்திற்குள் இருந்த தாக அதிகாரிகள் தெரிவித்துள்ள னர்.

மேலும் சில மாணவர்கள் ஜன்னல் வழியாக வெளியே குதித்து தப்பிக்கும் காட்சிகளும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

மேலும் துப்பாக்கிப் பிரயோக த்தைமேற்கொண்ட மாணவன் பொலிஸாரினால் கைது செய் யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன. (நி-5)

# நாட்டில் எரிவாயுவிற்கு மீண்டும் தட்டுப்பாடா?

(கொழும்பு)
நாட்டில் மீண்டும் எரிபொரு ளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள தாக சந்தை தகவல் வட்டார ங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டில் டொலர்கள் பற்றாக் குறை மற்றும் வணிக வங்கி களால் கடன் கடிதங்கள் வழங் கப்படாததால் எரிவாயுவை இற க்குமதி செய்ய முடியவில்லை என லாப் நிறுவனத்தின் தலை வர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, லாப் மற்றும் லிட்ரோ எரிவாயு நிறுவனங்கள் இரண்டுமே எரிவாயு விலையை அதிகரிப்பதற்காக அரசாங்க த்திடம் அனுமதி கோரியுள் ளமை குறிப்பிடத்தக்கது.(நி-5)

# பால்மா, கோதுமை மா, சீமெந்து ஆகியவற்றின் விலைகள் அதிகரிப்பு?

(கொழும்பு)
பால் மா, கோதுமை மா மற்றும் சீமெந்து ஆகியவற்றின் விலைகளை எதிர்வரும் தினங் களில் அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என நுகர் வோர் விவகார இராஜாங்க அமைச்சின் உயர் அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் விலைக் குழுவினால் நடத்தப்பட்ட கண்காணிப்பின் பிர காரம்,வாழ்க்கை செலவுக்குழுவின் அனுமதியுடன் இந்த பொருட்களு க்கான விலையை அதிகரிக்க நேரிடும் என அவர் தெரிவித்தார்.

இந்தப் பொருட்களுக்கான விலை, சர்வதேச சந்தையில் அதிகரித்துள்ள பின்னணியில், குறித்த பொருட்களுக்கான விலையை அதிகரிக்குமாறு நிறுவனங்கள் கடந்த 6 மாத காலமாக கோரியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

## ஊரடங்கு காலத்தில் தொடரும் கொடூரம்


(மாத்தறை)
மாத்தறை மாவட்டம், அக்கு ரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட மலதுவ பிரதேசத்தில் இருவருக்கிடையில் ஏற்பட்ட முறுகலில் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அக்குரஸ்ஸ, மலிதுவ பிர தேசத்தைச் சேர்ந்த 41 வயது டைய நபரே இவ்வாறு படு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சடலம், பிரேத பரிசோதனை க்காக மாத்தறை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலையுடன் தொட ர்புடைய நபர் தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரைக் கைதுசெய் வதற்கான நடவடிக்கையில் அக்குரஸ்ஸ பொலிஸார் ஈடுபட் டுள்ளனர். (நி-5)

# சென்னை வெற்றி!



மும்பை அணிக்கு எதிரான போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓட்டங்களினால் அசத்தலான வெற்றியை பதிவு செய்துள்ளது.

2021 ஐ.பி.எல். தொடரின் 30 ஆவது லீக் போட்டி நேற்று முன் தினம் டுபாயில் டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸிக்கும், மும்பை இந்தியன்ஸ் அணிகளுக்கு இடையிலும் ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென்னை, ஆரம்பத்திலேயே விக்கெட்டுகளை பறிகொடுத்து தடுமாறியது.

அதன்படி ஆறு ஓவர்களின் நிறைவில் 4 விக்கெட்டுக்களை பறிகொடுத்த சென்னை 24 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தடுமாறியது.

எனினும் 5 ஆவது விக்கெட்டுக்காக களமிறங்கிய ரவீந்திர ஜடேஜாவுடன் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களுள் ஒருவரான ருதுராஜ் கெய்க்வாட் கைகோர்த்து அதிரடி காட்டினார்.

இதனால் சென்னை 16.2 ஓவர்கள் நிறைவில் 100 ஓட்டங்களை கடந்தது, எனினும் அதே ஓவரின் நான்காவது பந்து வீச்சில் ஜடேஜா 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியாக சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 156 ஓட்டங்களை குவித்தது.

ருதுராஜ் கெய்க்வாட் மொத்தமாக 58 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 9 பவுண்டர்கள் அடங்கலாக 88 ஓட்டங்களுடனும், தாகூர் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காதிருந்தனர் பந்து வீச்சில் மும்பை அணி சார்பில் ட்ரென்ட் போல்ட், ஆடம் மில்னே மற்றும் பும்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

157 ஓட்டம் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் நிறைவில் 8 விக்கெட்டுக்களை பறிகொடுத்து 136 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அணிசார்பில் அதிகபடியாக திவாரி 40 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டம் பெற்றார். சென்னை அணிசார்பில் பந்து வீச்சில் பிராவோ 3 விக்கெட்டுக்களையும், தீபக் சஹார் 2 விக்கெட்டுக்களையும், ஹேசில்வுட் மற்றும் சர்துல் தாகூர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக ருதுராஜ் கெய்க்வாட் தெரிவானார். இந்த வெற்றியின் மூலம் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி புள்ளிப் பட்டியலில் 6 வெற்றிகளுடன் முதல் இடத்தை பிடித்துள்ளது. (4-6)

# ஆர்.சி.பி அணி கப்டன்
## பதவியிலிருந்து கோலி விலகல்




2021 இந்தியன் பிரீமியர் லீக் சீசனுக்குப் பிறகு விராட் கோலி அணியின் தலைவர் பதவியில் இருந்து விலகுவார் என்று ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி நிர்வாகம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

எனினும் உரிமையாளரின் மிகவும் விரும்பப்பட்ட வீரர்களில் ஒருவரான 32 வயதான கோலி, ஆர்.சிபி அணியின் ஒரு முக்கிய வீரராக தொடர்ந்தும் இருப்பார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள விராட் கோலி, ஆர்.சி.பியின் கப்டனாக இது எனது கடைசி ஐ.பி.எல். எனது கடைசி ஐ.பி.எல். விளையாட்டை விளையாடும் வரை நான் ஒரு ஆர்.சி.பி. வீரராகவே இருப்பேன். என்னை நம்பி என்னை ஆதரித்த அனைத்து ஆர்.சி.பி ரசிகர்களுக்கும் நன்றி என்று கூறியுள்ளார். (4-6)







| பாத்திமா | தாரணி | பிரணவன் |
|---|---|---|










| பார்த்தீபன் | யாமினி | கஜா |
|---|---|---|










நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## இராசிபலன்

21.09.2021
புரட்டாதி 05, செவ்வாய்க்கிழமை
பிரதமை முழுவதும்
உத்தரட்டாதி முழுவதும்
சுபநேரம் 10.32- 12.02 மணிவரை
இராகுகாலம் 3.02- 4.32 மணிவரை
சந்திராஷ்டமம்-மகம்
மஹாளய பட்ச ஆரம்பம், அமிர்தசித்தம் வள்ளவன்

**மேஷம்** - தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, நண்பர்கள் கடைசி நேரத்தில் உதவ முன்வருவர், வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**ரிஷபம்** - இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், உறவினர் வருகையுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மிதுனம்** - குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் வளர்ச்சி கூடும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கடகம்** - மறதியால் விட்டுப் போன பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**சிம்மம்** - உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**கன்னி** - சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் ஏற்படலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** - நண்பர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** - புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பூர்வீகச் சொத்துக்கள் தொடர்பில் நன்மையுண்டு, வழிபாட்டால் வளர்ச்சி காணும் நாள்.

**தனுசு** - மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், செய்தொழிலில் எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மகரம்** - பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், சகோதர வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** - ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மீனம்** - திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

நீ நினைத்தால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கலாம்

# அச்சமின்றி தடுப்பூசியைப் பெறுங்கள்

## இராஜாங்க அமைச்சர் மாணவர்களுக்கு அறிவுறுத்தல்

**(கொழும்பு)**

**மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசிகளே வழங்கப்படவுள்ளன. எனவே எவ்வித அச்சமும் இன்றி தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு மாணவர்களையும் வலியுறுத்து கின்றோம் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசியை வழங்குவதற்கு அனுமதி கிடைக்கப்பெறும் முதலாவது தினத்திலேயே அவர்களுக்கு தடுப்பூசிகளை வழங்க முடியும். அதற்கமைய எதிர்வரும் இரு வாரங்களுக்குள் அந்த பணிகளை ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கான தடுப்புசி வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

கல்விப் பொதுத் தராதர உயர்தர மற்றும் சாதாரண தர பரீட்சைகள் காலம் தாழ்த்தப்பட்டுள்ளன. இந்த கால தாமதமானது மாணவர்களின் வாழ்நாள் முழுவதிலும் தாக்கம் செலுத்தும். இந்த நிலைமையிலிருந்து மாணவர்களை மீட்டு, துரிதமாக பரீட்சைகளை நடத்துவதே எமது தற்போதைய தேவையாகும். அதற்கமைய மாணவர்களுக்கு தடுப்புசி வழங்கும் பணிகள் மிக முக்கியத்துவமுடையவையாக உள்ளன.

மாணவர்களுக்கு தடுப் புசி வழங்குவது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவினால் தொடர்ச்சியாக மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவித்தார். (நி-5)

# சீனி இல்லை, மாவும் இல்லை; நாட்டில் தலைவரும் இல்லை, தளபதியும் இல்லை

(கொழும்பு)

நாடு தொடர்ச்சியாக மூடப்பட்டுள்ளது. நாட்டில் சீனி இல்லை, மாவு இல்லை, மருந்துகள் இல்லை. குறைந்த பட்சம் அடிப்படைத் தேவையை நிறைவேற்ற ஊழிப்பறைகளும் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.



அத்துடன் நாட்டின் அரச தலைவரும் இல்லை தளபதியும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு - கோட்டையில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள தடுப்புசி போடப்பட்டபோது, இங்கு அரசாங்கத்தைக் காப்பாற்றிக் கொள்ளவே அரசாங்கம் தடுப்புசி வழங்கியது.

தடுப்புசி போடுவதில் ஏற்பட்ட நீடித்த தாமதத்தால் நாடு சீரழிந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# கணவனைக் கத்தியால் குத்தி கொலை செய்த மனைவி

(கொழும்பு)

கண்டி மாவட்டம், பொல்காஹவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெட்டிகும்புர பிரதேசத்தில் குடும்பத்தகராறு காரணமாக தனது கணவரை மனைவி கத்தியால் குத்திப் படுகொலை செய்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில், மெட்டிகும்புர, கெந்தேஹேன பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பஸ்தரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய உயிரிழந்த நபரின் மனைவியைப் பொலிஸார் கைது செய்துள் ளனர்.

இது தொடர்பில் பொல்காஹவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# அனைத்து மது விற்பனை நிலையங்களுக்கும் சீல்

## கெக்கிராவையில் சுகாதார மருத்துவ அதிகாரி அதிரடி

(கொழும்பு)

கெக்கிராவை பிராந்திய சுகாதார மருத்துவ அதிகார எல்லைக்கு உட்பட்ட அனைத்து மதுபானசாலைகளையும் மறு அறிவித்தல் வரை மூடி சீல் வைக்க பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின், கடந்த ஓகஸ்ட் 20 ஆம் திகதி ஊடக அறிவிப்பின் பிரகாரம் மதுபான விற்பனை நிலையங்கள் அத்தியாவசிய சேவைப் பட்டியலுக்குள் உள்ளடக்கப்படாத நிலையிலும், அவற்றை திறக்க மதுவரி திணைக்களம் மற்றும் சுகாதார அமைச்சின் உரிய அனுமதி பெற்றுக் கொள்ளப்படாமையையும் மையப்படுத்தி அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு மற்றும் தொற்றுப் பரவல் சூழலை கருத்தில் கொண்டு கெக்கிராவை பிராந்திய சுகாதார மருத்துவ அதிகார எல்லைக்கு உட்பட்ட அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் இவ்வாறு மூடுவதற்கு நடவடிக்கை எடுத்ததாக பிராந்திய சுகாதார மருத்துவ பணிமனையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (நி-5)

# வாள்வெட்டுக்குழுவை சேர்ந்த நால்வர் போதைப்பொருளுடன் கைது

## வாள் ஒன்றும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வாள் வெட்டு குழுவை சேர்ந்த நால்வர் போதைப்பொருளுடனும், வாளுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை அவர்கள் பயணித்த காரையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

வாள்வெட்டுக் குழு உறுப்பினர்களில் ஒருவர் என பொலிஸாரினால் அடையாளப்படுத்தப்பட்ட நல்லூர் பகுதியை சேர்ந்த ஒருவர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வருவதாக பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு தகவல் கிடைத்தது.

அதனடிப்படையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த நபர் தனது நண்பர்களுடன் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளார் எனும் தகவல் கிடைத்ததை அடுத்து , பொலிஸ் புலனாய்வு பிரிவினர் அவர்களின் காரை பின் தொடர்ந்து வழிமறித்து சோதனையிட்டனர்.

அதன் போது காருக்குள் இருந்து 3கிராம்ஹெரோயின் போதைப்பொருள் , வாள் ஒன்றும் மீட்கப்பட்டது. அதனை அடுத்து காரில் இருந்த நால்வரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (4-7-33)

# மதுபோதையில் வந்த குழு வீட்டிற்குள் நுழைந்து அட்டகாசம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-உசன் பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள்களில் சென்ற குழுவொன்று அப்பகுதியில் உள்ள வீடொன்றினுள் நுழைந்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது.

வீதியால் அதிவேகமாகவும், அதிக ஒலி எழுப்பியவாறும் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த குழுவொன்றை எச்சரித்தவரின் வீட்டிற்குள் நுழைந்தே குறித்த குழு அட்டகாசத்தில் ஈடுபட்டதாக கொடிகாமப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7-30)

# 250 லீற்றர் மதுபானம் மீட்பு

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி காஞ்சனா விமலவீர தலைமையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் துன்னாலை கரவெட்டி மேற்கு பகுதியில் சட்ட விரோத முறையில் உற்பத்தி செய்யப்பட்ட 250 லீற்றர் மதுபானமும் மற்றும் மதுபான உற்பத்திக்கு பயன்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (4-7-60)

# இன்று கொவிட் தடுப்பூசிகள் வழங்கப்படும் இடங்கள்

| MOH | கிராம உத்தியோகத்தர் பிரிவு (20 - 29 வரையான) | தடுப்பூசி வழங்கப்படும் இடங்கள் |
|---|---|---|
| சங்கானை | ஜே/ 157, ஜே/ 158, ஜே/ 167, ஜே/ 177<br>ஜே/ 170, ஜே/ 171 | வட்டு இந்துக் கல்லூரி<br>மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் |
| சாவகச்சேரி | ஜே/ 288 - ஜே/ 291<br>ஜே/ 300, ஜே/ 303, ஜே/ 306<br>ஜே/ 313, ஜே/ 314, ஜே/ 316, ஜே/317<br>ஜே/ 328 - ஜே/ 332 | கைதடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்<br>கோல்ட் ஜூபிலி மண்டபம், சாவகச்சேரி<br>PHC மட்டுவில் வடக்கு<br>DH கொடிகாமம் |
| யாழ்ப்பாணம் | ஜே/ 73 - ஜே/ 77<br>ஜே/ 79 - ஜே/ 82<br>ஜே/ 103, ஜே/ 105, ஜே/ 106, | சென்.ஜோன்ஸ் கல்லூரி<br>வைத்தீஸ்வரா வித்தியாலயம்<br>துர்க்கா மணிமண்டபம், நல்லூர் |
| காரைநகர் | ஜே/ 42, ஜே/ 43 | MOH Office, காரைநகர் |
| கரவெட்டி | கிராம சேகவர் பிரிவு முழுவதும் | MOH Office, கரவெட்டி |
| ஊர்காவற்துறை | கிராம சேகவர் பிரிவு முழுவதும் | MOH Office, ஊர்காவற்துறை |
| கோப்பாய் | ஜே/ 261, ஜே/ 262<br>ஜே/ 264, ஜே/ 266<br>ஜே/ 273, ஜே/ 278<br>ஜே/ 285, ஜே/ 286 | MOH Office, கோப்பாய்<br>உரும்பிராய் இந்து கல்லூரி<br>புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி<br>DH அச்சுவேலி |
| மருதங்கேணி | ஜே/ 422 - ஜே/ 424 | DH அம்பன் |
| நல்லூர் | ஜே/ 89 | மணியம்தோட்டம் தேவாலயம் |
| பருத்தித்துறை | ஜே/ 401 - ஜே/ 405 | யா/ வட இந்து மகளிர் கல்லூரி |
| சண்டிலிப்பாய் | ஜே/ 129 - ஜே/ 139 | DH மானிப்பாய் |
| தெல்லிப்பளை | கிராம சேகவர் பிரிவு முழுவதும் | வயாவிளான் மகா வித்தியாலயம் |
| உடுவில் | ஜே/ 182, ஜே/ 183, ஜே/185 - ஜே/187<br>ஜே/ 192 - ஜே/ 194<br>ஜே/ 195 - ஜே/ 199 | உடுவில் மகளிர் கல்லூரி<br>தாவடி கிராம உத்தியோகத்தர் அலுவலகம்<br>MOH Office, உடுவில் |
| வேலணை | ஜே/ 03, ஜே/ 04<br>ஜே/ 05, ஜே/ 06 | நெடுந்தீவு றோ.க மகளிர் கல்லூரி<br>நெடுந்தீவு சுப்பிரமணியம் வித்தியாலயம் |



யாழ்ப்பாண பல்கலைக்கழக சுகநல நிலையத்தின் பாவனைக்காக யாழ்ப்பாண மருத்துவ பீட கனடா பழைய மாணவர்களினால் நான்கு பல்ஸ் ஒக்ஸிமீற்றர்களும், டிஜிற்றல் வெப்பமானியும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

(படம் : ரவிசாந், சிவசாந்தன்)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தென்மராட்சி மீசாலை வைரவ சுவாமி கந்தசுவாமி கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ தே.கௌரிசங்கரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம் பெறவுள்ளது. (4-7-6)

# வாகன இலக்க தகடுகளை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலிருந்து 2021.08.09 ஆம் திகதி யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் தங்களுக்குரிய கடிதங்கள் கிடைக்கப்பெற்றதும் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன்பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# வீதியால் நடந்து சென்றவர் மீது அலவாங்கால் தாக்குதல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கெற்பேலி மத்திய பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீதியால் சென்ற நபரை இனந்தெரியாதோர் அலவாங்கால் தாக்கியதால் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வீதியால் நடந்து சென்ற 30 வயதான இளைஞனை பின்புறமாக வந்தோர் அலவாங்கால் தாக்கியதில் கழுத்துப் பகுதியில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7-30)

# அடுத்த வருடமும் வாகன இறக்குமதி கட்டுப்படுத்தப்படும்

(கொழும்பு)

அடுத்த வருடமும் இந்த வருடம் போன்றே வாகன இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதற்கான யோசனைகள் முன்வைக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் காலங்களில் ஏற்படவுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக மின்சார கார்களை ஊக்குவிப்பதற்கும் தயாராகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தை முன்வைப்பதற்கு இன்னமும் இரண்டு மாத காலப்பகுதிகளே உள்ளன.

இதனால் வரவு- செலவுத் திட்டம் தொடர்பான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன் போதே வாகன இறக்குமதி தொடர்பான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய நீர்ப்பாசனம், நெடுஞ்சாலைகள், விவசாயம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தி எதிர்வரும் நவம்பர் மாதம் 'உற்பத்தி பொருளாதாரம்' என்ற தலைப்பில் பொருளாதார இலக்குகளை அடையும் வகையில் வரவு- செலவுத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

அது தவிர, அடுத்த ஆண்டு வரவு- செலவுத் திட்டத்திலும், இந்த ஆண்டை போன்று முடிந்தவரை இறக்குமதிகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதில் வாகனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் 200 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

## உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கிராமிய மட்டத்திலான அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதியை மாவட்ட செயலாளர்களிடம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் மற்றும் அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு இடையில் இடம்பெற்ற காணொளிமூல கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தொழில் வாய்ப்புகளை உருவாக்கல், ஜீவனோபாயம் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் மட்டத்தில் நிதிஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக, இம்முறை வரவு- செலவுத் திட்டத்தில் ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு 200 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்படவுள்ளது. (நி-5)

❖ சுகாதார பாதுகாப்பு உடை அணிந்து
❖ சமூக இடைவெளி பேணி

# மதுபான நிலையங்கள் திறப்பிற்கு எதிராகப் போராட்டம்

## இருவர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நிலையில், மதுபான விற்பனை நிலையங்களை திறக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக, நேற்று முன்தினம் கோட்டை புகையிரத நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய சுயதொழில் வர்த்தக சங்கத்தினரால் இந்த ஆர்ப்பாட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

சுகாதாரப் பாதுகாப்பு ஆடைகளை அணிந்த வண்ணம் சுமார் 20 பேர் வரையில் இணைந்து சமூக இடைவெளியைப் பேணி இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். ஆர்ப்பாட்டத்தை கலைக்க பொலிஸார் உத்தரவிட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது ஆர்ப்பாட்ட கோஷங்களை முன்வைத்துக் கொண்டிருந்த போது திடீரென பொலிஸார், ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்ததாக கூறப்படும் இருவரை பலாத்காரமாக இழுத்துச் சென்று ஜீப் வண்டியில் ஏற்றினர்.

பின்னர் அவ்விருவரும் தனிமைப்படுத்தல் சட்ட திட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் அறிவித்தனர். (நி-5)

# தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்படுமா?

(கொழும்பு)

கொவிட் தடுப்பூசி அட்டையைக் கட்டாயப்படுத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சட்ட ரீதியான விடயங்கள் உள்ளிட்ட அனைத்து வகையான விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டு வருவதாகவும் தடுப்பூசி ஏற்றிக் கொள்வதற்கு தகுதி உடைய அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றியதன் பின்னரே இந்த தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# ஐ.நா. பொதுச்சபை முன்பாக ஜனாதிபதி கோட்டாவிற்கு எதிரான போராட்டத்திற்கு ஏற்பாடு

(கொழும்பு)

ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றுவதற்காக அமெரிக்கா - நியூயோர்க் நகருக்குச் சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகப் போராட்டத்தை மேற்கொள்ள புலம்பெயர் தமிழர்கள் தயாராகி வருகின்றனர்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டமானது நாளை புதன்கிழமை காலை 11 மணி முதல் மாலை 3 மணிவரை நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. பொதுமன்றின் முன் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தார். அத்துடன், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய இடத்திலும் இவர் இருக்கின்றார் என போராட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5)

# மேலும் 73,000 பைசர் தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்தன



(கொழும்பு)

நாட்டிற்கு மேலும் 73 ஆயிரம் பைசர் தடுப்பூசிகள் நேற்று அதிகாலை எடுத்து வரப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு குறித்த தடுப்பூசிகள் கொண்டு வரப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)


# சேவைநலன் பாராட்டு



திரு. சுப்பிரமணியம் சூரியகுமார் SLTS-I
B.A. Dip In. Edu
சமூக விஞ்ஞான, ஆங்கில பாட ஆசிரியர்
யா/ வைத்தீஸ்வரா கல்லூரி

**சேவை விபரம்**
யா/ வேலணை மத்திய கல்லூரி
1998-2005
யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்
பெண்கள் பாடசாலை
2005-2007
யா/ சைவத்தமிழ்
வித்தியாலயம், உரும்பிராய்
2007-2015
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி
2015-2021

27.08.2021 இல் ஓய்வு பெற்ற எங்கள் சூரியகுமார் ஆசிரியரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.



திரு. சும்பிராசா சிவபாலன் SLTS-I
B.A. Commerce Trained
பகுதித் தலைவர், தரம்:6-7
யா/ வைத்தீஸ்வரா கல்லூரி

**சேவை விபரம்**
யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்
1990-1992
பலாலி. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
1993 1995
யா/ புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய
பெண்கள் பாடசாலை
1995-1996
யா/ வேலணை மத்திய கல்லூரி
1996-2001
யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்
பெண்கள் பாடசாலை
2002-2011
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி
2012-2021

21.09.2021 இல் ஓய்வு பெறும் எங்கள் சிவபாலன் ஆசிரியரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ வைத்தீஸ்வரா கல்லூரி,
சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.

(7941)

# 18 லட்சத்திற்கு ஏலம் போன கணேசர் கோவில் லட்டு

(ஐதராபாத்)

தெலுங்கானா மாநிலம் பாலாபூரில் பிரசித்தி பெற்ற கணேசர் கோவில் உள்ளது. இங்கு ஆண்டுதோறும் நடை பெறும் விநாயகர் சதுர்த்தி விழாவின் கடைசி நாளில், கணேசருக்கு படைக்கப்பட்ட லட்டு ஏலம் விடப்படும்.கடந்த ஆண்டு கொரோனா காரண மாக இந்த ஏலம் நடைபெற வில்லை. ஆனால் இந்த ஆண்டு நேற்று முன்தினம் ஏலம் விடப்பட்டது. அப்போது ரூ.18.90 இலட்சம் என்ற உச்ச விலைக்கு லட்டு ஏலம் போனது.

தெலுங்கானாவின் அண்டை மாநிலமான ஆந்திராவைச் சேர்ந்த மேலவை உறுப்பினர் ரமேஷ் யாதவ், பாலாபூரைச் சேர்ந்த மார்ரி சஷாங் ரெட்டி ஆகியோர் லட்டை ஏலம் எடுத் தனர். பாலாபூர் கணேசர் கோவில் விநாயகர் சதுர்த்தி விழாவில் தெலுங்கானா கல்வி மந்திரி சபிதா ரெட்டி உள்ளி ட்டோர் கலந்துகொண்டனர்.(7-4)



# அமெரிக்காவால் நீக்கப்பட்ட அமைச்சை மீண்டும் உருவாக்கிய தலிபான்கள்

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான இராணுவ நடவடி க்கையின் போது நீக்கப்பட்ட 'அறம் பரப்புதல் மற்றும் தீய செயற்பாடு களைக் கட்டுப்படுத்துவதற்கான அமைச்சை' தலிபான்கள் மீண்டும் உருவாக்கியுள்ளனர்.**

'இஸ்லாத்திற்கு சேவை செய் வதே முக்கியம். அதனால் 'அறம் பரப்புதல் மற்றும் தீய செயற்பாடுகளைக்கட்டுப்படுத்து வதற்கு தனியான அமைச்சு' அவசியமெனக் குறிப்பிட்டுள்ள ஆப்கானிஸ்தானின் மத்திய பிராந்தியத் தலைவர் முகமது யுசுப், 'இஸ்லாமிய சட்ட விதிக ளின் படி தண்டனைகள் வழங் கப்படும்.

அவற்றில் பெரும்பாவங்க ளுக்கான தண்டனைகளும் அடங்கும். இஸ்லாமிய விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் அமைதியான நாட்டை உருவா க்கவே நாங்கள் விரும்புகி றோம்.அமைதியும் இஸ்லாமிய விழுமியங்களுமே எங்களது ஒரே விருப்பம்' என்றுள்ளார்.

வேளா வேளைக்கு தொழு வதும் ஆண்கள் தாடி வளர் ப்பதும் கண்டிப்பாக அமுல்படு த்தப்பட்டது.

இது தொடர்பில் கண்கா ணித்து சட்டத்தை அமுல்படு த்தவென தெருவுக்கு தெரு நல்லொழுக்கம் தொடர்பான பொலிஸார் கடமையில் ஈடுப டுத்தப்பட்டிருந்தனர் என்றும் நியூயோர்க் போஸ்ட் சுட்டிக் காட்டியுள்ளது.

அமெரிக்காவால் நீக்கப்பட்ட அமைச்சரவையை மீண்டும் தலிபான்கள் ஆரம்பித்துள் ளமை அமெரிக்காவுக்கு சவால் விடுவதாகவும், அமெரிக்கா தோல்வியை ஏற்றதாகவும் உள்ளமைகுறிப்பிடத்தக்கது.(7-4)

# பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தலில் குத்துச்சண்டை வீரர் போட்டி



(மணிலா)

**பிலிப்பைன்ஸில் அடு த்த ஆண்டு நடைபெற விரு க்கும் ஜனாதிபதிதேர்தலில் போட்டியிட இருப்பதாக குத்துச்சண்டை நட்சத்திரம் மேனி பாக்கியாவ் அறிவித் துள்ளார்.**

பாராளுமன்ற உறுப்பின ராக உள்ள அவர் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், "நான் ஒரு குத்துச் சண்டை வீரன். களத்தில் மட்டு மில்லாமல் களத்துக்கு வெளியிலும் நான் போராடுவேன்.

பிலிப்பைன்ஸில் மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்ப டுத்த விரும்புகிறார்கள். அவர்களது ஆதரவுடன் ஆட்சியமைப்பேன் என்றார்.

பாக்கியாவ் சார்ந்துள்ள பிடிபி-லபான் கட்சியின் இன் னொரு அணி, தற் போதைய அதிபர் ரோட் ரிகோடுடேர் தேவை துணை அதிபராக முன் மொழிந்துள்ளது. அதற்கு டுடேர்தேவும் சம்மதித்து ள்ளார். (7-4)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 1,500 கிலோ கடலட்டைகள் மீட்பு

(சென்னை)

மனோலி தீவு வழியாக இலங்கைக்கு கடத்திய 1,500 கிலோ கடல் அட்டை கள் மற்றும் நாட்டுப்படகை இந்திய கடலோரக் காவல் படை, வனத்துறை அதி காரிகள் பறிமுதல் செய்த னர்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் உள்ள இந் திய கடலோரக்காவல் படை மற்றும் மண்டபம் தலை மையில் கடலோரப் படை வீரர்கள், வன ஊழியர்கள் மன்னார் வளை குடா கடற் பகுதியில் ஹோவர் கிராப்ட் மூலம் நேற்றுக் காலை கூட்டு ரோந்து சென்றனர்.

ஹோவர் கிராப்ட் விரை ந்து வருவதை அறிந்த நாட்டுப் படகில் இருந்த 4 பேர் தப்பி ஓடினர். பதி வெண் இல்லா நாட்டுப்படகு, அதிலிருந்த கடல் அட்டை மூட்டைகளை மண்டபம் இந்திய கடலோக்காவல் படை முகாம் கொண்டு வந் தனர்.

அதில் பதப்படுத்தப்படாத பச்சை கடல் அட்டைகள் ஆயிரத்து 500 கிலோ இருந்தன. இக்கடல் அட்டை மூட்டைகளை மண்டபம் வனத்துறையினர் வசம் ஒப்படைக்கப்பட்டன. இதே போல் உதவி வனப் பாது காவலர் கணேசலிங்கம் தலைமையில் வனப் பாது காப்பு படை, வன காவல் படை இணைந்து தேவிபட் டினம் கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் காலை ரோந்து பணியில் ஈடுபட்டி ருந்தனர்.

அப்போது இரு சக்கர வாகனத்தில் வந்த ஒரு வரை பிடித்து சோதனை செய்தனர். அவரிடமிருந்த 35 கிலோ கடல் அட்டை மற்றும் 200 கிராம் கடல் குதிரைகளை பறி முதல் செய்தமை குறிப்பிடத் தக்கது. (7-4-6-100-285)

# ஏசிக்கு பதில் பெயின்ட் ஆராய்ச்சியாளர்கள் புதிய கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

1000 சதுர அடி கொண்ட மாடி பரப்பளவை இந்த பெயின்டால் ஒரு கோட் அடிக்கும் போது ஏசி மூலம் 10 கிலோவாட் மின் ஆற் றலை எடுத்துக்கொண்டால் என்ன குளிர்ச்சி கிடைக் குமோ அது மின்ஆற்றல் இல்லாமலே கிடைக்கும்.

அமெரிக்காவில் உள்ள பர்டியூ பல்கலைக்கழகத்தின் பரிசோதனைக்கூடத்தில் ஆராய்ச்சியாளர்கள் உல கிலேயே அடர் வெள்ளை நிற பெயின்டை உருவாக் கியுள்ளனர். இதுவே தூய வெண்மை நிறம் கொண்ட பெயின்ட் என்ற கின்னஸ் உலக சாதனையையும் இந்த பெயின்ட் படைத்தி ருக்கிறது.

சூரிய வெப்பத்திலிருந்து கட்டடத்தை தடுப்பதற்காக இந்த பெயின்ட் உருவாக் கப்பட்டுள்ளது. இந்த பெயி ன்ட் குறித்து பர்டியூ பல்க லைக்கழக மெக்கானிக்கல் எஞ்சினியரிங் பிரிவின் பேராசிரியர் ருவான் கூறு கையில், "7 ஆண்டுகளுக்கு முன் ஆற்றலை மிச்சப்படு த்துவதும், காலநிலை மாற் றம் குறித்து மட்டுமே எங் கள் எண்ணம் இருந் தது. அதன் மூலம் உருவானதே இந்த தூய வெள்ளை பெயின்ட். இந்த பெயின்ட் சூரிய வெளி ச்சத்தை அதிகளவில் பிரதிபலிக்கும்.

இந்த பெயின்ட் அடிக்க ப்படும் கட்டிடம் எந்த ஆற்ற லையும் எடுத்துக் கொள் ளாமலே சுற்றுப்புற வெப்ப நிலையை குளிர்வாக வைக் கிறது.

1000 சதுர அடி கொண்ட மாடி பரப்பளவை இந்த பெயின்டால் ஒரு கோட் அடிக்கும் போது ஏசி மூலம் 10 கிலோவாட் மின் ஆற் றலை எடுத்துக்கொண்டால் என்ன குளிர்ச்சி கிடைக் குமோ அது மின் ஆற்றல் இல்லாமலே கிடைக்கும். பெரும்பாலான வீடுகளில் பயன்படுத்தப்படும் ஏசிக் களை காட்டிலும் இது அதிக ஆற்றல் வாய்ந்ததாகும்.

சந்தைகளில் கிடைக்கும் சாதாரண வெள்ளை பெயின்ட் 80% முதல் 90% சூரிய வெப்பத்தை பிரதிபலிக்கும், மேலும் இவை சூரிய வெப்பத்தை பெருமளவில் தடுக்காது.

இந்த பெயின்டை சந் தைப்படுத்துவதற்காக நிறு வனம் ஒன்றுடன் ஆராய்ச் சியாளர்கள் ஒப்பந்தம் செய் திருக்கின்றனர். (7-4)

# ரஷிய பாராளுமன்ற தேர்தல் அதிபர் புடின் கட்சி முன்னிலை

(மாஸ்கோ)

ரஷிய பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி விளா திமீர் புடின் தலைமை யிலான ஐக்கிய ரஷியா கட்சி முன்னிலை பெற்றிருப்பது ஆரம்பகட்ட முடிவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

ரஷிய பாராளுமன்றத் தேர்தல் கடந்த வெள்ளிக் கிழமை தொடங்கி ஞாயிற் றுக்கிழமை வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. இதி ல் புடின் தலைமையிலான ஐக்கிய ரஷியா கட்சி உட்பட 14 கட்சிகள் போட்டியிட்டன. தேர்தல் முன்னிலை விவர ங்கள் ஞாயிற்றுக்கிழமை இரவு வெளியாகின.

9 சதவீத வாக்குச்சா வடிகளின் முடிவுகளின்படி ஐக்கிய ரஷியா கட்சி முன்னிலையில் இருப்பதாக தேர்தல் ஆணையம் தெரி வித்துள்ளது.



பாராளுமன்றத்தில் மொத்தம் உள்ள 450 இடங்களில் தற்போது ஐக்கி ய ரஷியா கட்சிக்கு 334 உறுப்பினர்கள் உள்ளனர். இத்தேர்தலிலும் அக்கட்சி அறுதிப் பெரும்பான்மை யுடன் வெற்றி பெறும் பட் சத்தில், 2024-ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர் தலிலும் போட்டியிடும் வகை யில் அரசியலமைப்புச்சட்டத் திருத்தத்தை புடின் தடையி ன்றி மேற்கொள்ள வழி வகுக்கும். (7-4)

# எல்லைதாண்டிய இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் ஆய்வு மாநாடு

(முறிகண்டி)

எல்லை தாண்டிய இந்திய மீனவர்கள் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் மாநாடு எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9:30 மணிக்கு இணையவழியில் (Passcode: 313906 Webinar ID: 871 6508 3331 Passcode: 313 906) இடம் பெறவுள்ளதாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் அறிவித்துள்ளது இது தொடர்பாக அந்நிறுவனம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் ஆயிரக்கணக்கான இந்திய இழுவைமடி படகுகள் வட பகுதியின் கரையை அண்டிய பிரதேசங்களுக்குள் புகுந்து மீனவ வளங்கள் மற்றும் மீனவர்களின் கோடிக்கணக்கான சொத்துக்களை அழித்து வருகின்றமையானது வட பகுதி மீனவர்கள் முகம் கொடுக்கும் மிகப் பெரிய பிரச்சினையாகும். கடந்த மாதம் முழுவதுமாக இப்பிரச்சினை வளர்ச்சியடைந்துள்ளதோடு மீனவர்களுக்கிடையில் முரண்பாட்டை தோற்றுவிப்பதற்கான முயற்சிகளும் உருவாகின.

கடந்த 20 வருடங்களாக தொடர்ந்து காணப்படுகின்ற இப்பிரச்சினைக்கு ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமும் நிலையான தீர்வு ஒன்றை வழங்கவில்லை.

தற்போது இப்பிரச்சினையானது வட பகுதி மீனவர்களுக்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள அதே வேளை சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் ரீதியில் பல பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது.

எனவே இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் அமைப்பினரை தெளிவுபடுத்தி இப்பிரச்சினையின் தன்மையை வெளிக் கொணர்ந்து நிலைத்திருக்கக்கூடிய தீர்வை எடுப்பதற்காக தேசிய கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுப்பதன் நோக்கத்துடன் இணையவழி கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளோம்.

எனவே பொறுப்புமிக்க ஊடகவியலாளர் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு இப் பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சிகளுக்கு ஒத்துழைப்புகளை வழங்குமாறு அழைக்கின்றோம் என தெரிவித்துள்ளனர். (7-4-6-100)

# பி.சி.ஆர் முடிவு வருவதற்கு முன் தொற்றாளர்கள் வெளிநாடு பயணம்

## சுகாதாரப் பிரிவினர் தெரிவிப்பு

(குருமண்காடு)

வவுனியா, தவசிகுளம் பகுதியில் இருந்து வெளிநாடு செல்வதற்காக மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 5 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், தொற்றாளர்கள் பி.சி.ஆர். முடிவு வருவதற்கு முன்னரே வெளிநாடு சென்றுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, தவசிகுளம் பகுதியில் திருமணம் ஒன்றிற்காக வெளிநாட்டில் இருந்து 6 பேர் வருகை தந்திருந்தனர். அவர்கள் மீளவும் வெளிநாடு செல்வதற்காக யாழ்ப்பாணம் ஆசிரியர் கல்லூரியில் பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுத்திருந்தனர்.

அவர்களது பி.சி.ஆர். முடிவுகள் நேற்று முன்தினம் இரவு ஞாயிற்றுக்கிழமை வெளியாகிய நிலையில் குறித்த 6 பேரில் 5 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, சுகாதாரப் பிரிவினர் குறித்த 5 பேரையும் தனிமைப்படுத்த சென்றபோது அவர்கள் வெளிநாடு சென்று விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பி.சி.ஆர். முடிவு வருவதற்கு முன்னர் குறித்த 6 பேரும் வீட்டில் இருந்து வெளியேறி வெளிநாடு சென்றுள்ளதாகவும், அதில் 5 பேர் கொவிட் தொற்றுடனேயே வவுனியாவில் இருந்து சென்றுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன்,குறித்த நபர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கு சுகா தாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், குறித்த தொற்றாளர்கள் தொற்றுடன் எவ்வாறு வெளிநாடு சென்றார்கள் என்பது குறித்தும் சுகாதாரப் பிரிவினர் கவனம் செலுத்தியுள்ளனர். (7-4-6-250)




# திருட்டில் ஈடுபட்ட குழு ஒருவர் மடக்கிப் பிடிப்பு

(குருமண்காடு)

வவுனியா குட்செட் வீதியில் நேற்று அதிகாலை வீடு புகுந்து திருட்டில் ஈடுபட்ட குழு ஒன்றைச் சேர்ந்த நபர் ஒருவர் மடக்கி பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, குட்செட் வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் திருட்டு சம்பவத்தில் ஈடுபடும் போது

வீட்டில் ஏற்பட்ட சத்தத்தைக் கேட்டு அயலவர்கள் ஓடி வரவும் சுதாகரித்த திருடர்கள் அங்கிருந்து தப்பி சென்றனர்.

எனினும், ஒருவர் அப்பகுதி மக்களால் பிடிக்கப்பட்டார்.

அதனை தொடர்ந்து வவுனியா பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பாக அறிவித்ததும் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் திருடனை கைது செய்து கொண்டு சென்றுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன், 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்களை திருட்டில் ஈடுபட்ட ஏனைய நபர்கள் கொண்டு சென்றுள்ளனர் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (7-4-6-250)



அதிகரித்து வரும் கொவிட் தொற்று பரவல் காரணமாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி கிளையினால் 3 மாத கால விசேட கொவிட் ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 1 மாத காலத்திற்கான சுகாதார உதவியாளர்களாக கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (படம்- சப்தசங்கரி)



மக்கள் விடுதலை முன்னணியின் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் கட்சி அமைப்பாளர்களால் சுகாதார பொருட்கள் நேற்று முன்தினம் மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் சுகந்தனிடம் கையளித்தனர். (படம்- சப்தசங்கரி)

# மணல் கடத்தல் முறியடிப்பு

(கரணவாய்)

வயல் நிலங்களில் இருந்து சட்டவிரோதமாக மணல் கடத்தப்படுவதாக நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மணல்கள் ஏற்றிவந்த பல வாகனங்கள் நெல்லியடி பொலிஸ் நிலையத்தால் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் போது கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு அவர்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தப்பட உள்ளார்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (4-7-60)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2021-17.10.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

### தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் இலாபம் கிட்டும்



**வேகத்தோடு விவேகத்தையும் கடைப்பிடித்து வெற்றிபெறும் சிம்ம இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன், தனாதிபதி புதனோடும், யோககாரகன் செவ்வாயோடும் இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதார முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். சுபகாரியங்கள் நடைபெறும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் இலாபம் கிட்டும்.

**மகர குருவின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் 6 ஆம் இடத்தில் நீச்சம் பெற்றும், வக்கிர இயக்கத்தோடும் சஞ்சரிக்கிறார். அஷ்டமாதிபதி நீச்சம் பெறுவது நன்மைதான்.

அதே நேரத்தில் பஞ்சமாதிபதியாகவும் அவர் இருப்பதால் பிள்ளைகளால் பிரச்சினைகள் வரலாம். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். ஜீவன ஸ்தானத்தில் குரு இருப்பதால் தொழில், உத்தியோகத்தில் நிறைய மாறுதல் வரலாம். பூர்வீக சொத்துக்களைப் பிரித்துக் கொள்வது சம்பந்தமாக ஏற்பட்ட பஞ்சா யத்துக்களில் தாமதம் ஏற்படும்.

**மகரச் சனியின் வக்கிர நிவர்த்திக் காலம்**

மாதத் தொடக்கத்தில், மகர இராசியில் சனி வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். புரட்டாதி 11 ஆம் திகதி அவர் வக்கிர நிவர்த்தியாகிறார். 6-க்கு அதிபதி பலம்பெறும் இந்த நேரத்தில் வியாபாரம் சூடுபிடிக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். எதிரிகள் பின் வாங்குவர். கொடுக்கல் - வாங்கலில் இருந்த தடுமாற்றங்கள் அகலும். உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சனியென்பதால், குடும்பத்தில் ஒருசில சமயங்களில் பிரச்சினைகள் ஏற்படலாம். கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும். துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வீண்விரயங்களிலிருந்து விடுபட சுபச் செலவுகளை மேற்கொள்ளுங்கள்.




**புதனின் வக்கிர நிவர்த்திக்காலம்**

மாதத் தொடக்கத்தில், கன்னி இராசியில் புதன் உச்சம் பெற்றிருக்கிறார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். இதுவரை வக்கிரம் பெற்றிருந்த அவர், புரட்டாதி 17 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகி பலம் பெறுகிறார். இதனால் தொழில் அமோகமாக நடைபெறும். கொடுக்கல் - வாங்கல் ஒழுங்காகும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். நல்ல சம்பவங்கள் அடுத்தடுத்து நடைபெறும். செவ்வாயோடும், இராசி நாதனோடும் புதன் இணைந்திருப்பதால் பூமி விற்பனையில் லாபம், சொத்து சேர்க்கை, அரசியல் வாதிகளால் அனுகூலம்ஏற்படும் நேரம் இது.

**விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்**

மாதத் தொடக்கத்தில் சுக்கிரன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். புரட்டாதி 17 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு செல்கிறார். சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன், சுக ஸ்தானத்தில் சஞ்சரிப்பது அற்புதமான நேரமாகும். அங்கிருந்து கொண்டு தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதால் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். குறிப்பாக ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். இம்மாதம் புதன்கிழமை தோறும் பெருமாள், லட்சுமி, அனுமனை வழிபடுவதன் மூலம் பொருளாதார நிலை உயரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பொருளாதார நிலை உயரும். கணவன் - மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். கொடுக்கல் - வாங்கல் ஒழுங்காகும். மனதளவில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நீண்ட நாளாக கிடைக்காத ஊதிய உயர்வும், பதவிஉயர்வும் இப்போது வரலாம்.

### விரயத்திற்கேற்ற வருமானம் உண்டு



**உறவிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் குணம் பெற்ற கன்னி இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் உங்கள் இராசியிலேயே உச்சம் பெற்றும், வக்கிரம் பெற்றும் இருக்கிறார். அவரோடு விரயாதிபதி சூரியனும், அஷ்டமாதிபதிசெவ்வாயும்இணைந்திருக்கிறார்கள். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் நல்ல காரியங்கள் பலவும் நடைபெறலாம். நம்பிக்கைக்குரிய நண்பர்கள் மூலம் தொழில் வளர்ச்சி ஏற்படும். விரயத்திற்கேற்ற வருமானம் உண்டு.

**மகர குருவின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் நீச்சம் பெற்றும், வக்கிரம் பெற்றும் சஞ்சரிப்பது யோகம்தான். கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும். குளிர்சாதனப்பெட்டி முதல் அரவை இயந்திரங்கள் வரை அடுக்கடுக்காக இல்லத்திற்கு தேவையான பொருட்களை வாங்கிமகிழ்வீர்கள். தாமதப்பட்ட கல்யாணம் தடையின்றி நடைபெறும். வீடுமாற்றம் அல்லது வெளி மாநிலங்களுக்கு செல்லும் வாய்ப்பு ஒருசிலருக்கு ஏற்படும். தாயின் உடல் நலம் சீராகும்.

**மகரச் சனியின் வக்கிர நிவர்த்திக்காலம்**

உங்கள் இராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் புரட்டாதி 11 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். பஞ்சம ஸ்தானத்தில் வலுப்பெறும் சனியால் நெஞ்சம் மகிழும் சம்பவம் நிறையவே நடைபெறும். பூர்வீக சொத்துத் தகராறு அகலும். புதிய திருப்பங்கள் ஏற்படும். சொத்துக்களால் ஆதாயம் உண்டு. 6 இற்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால் மறைமுக எதிர்ப்புகள் இருக்கத்தான் செய்யும். குறிப்பாக உறவுகள் திடீரெனப் பகையாகலாம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காமல் போகலாம். உத்தியோகத்தில் பொறுப்புகள் மாற்றப்படலாம்.




**புதனின் வக்கிர நிவர்த்திக்காலம்**

மாதத் தொடக்கத்தில், கன்னி இராசியில் புதன் உச்சம் பெறுகிறார். உங்கள் இராசியில் உச்சம் பெறும் புதன், தொழில் ஸ்தானத்திற்கும் அதிபதியானவர். வக்கிரம் பெற்றிருக்கும் அவர் புரட்டாதி 17 ஆம் திகதிவக்கிர நிவர்த்தியானதும், தடைகள் தானாக விலகும். தொழிலில் பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டு, புதியவர்களை இணைத்துக்கொள்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பரிசீலனையில் இருந்த பதவி உயர்வு கிடைக்கும். ஒருசிலர் விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

**விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்**

மாதத் தொடக்கத்தில், குடும்ப ஸ்தானத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கிறார். புரட்டாதி 17 ஆம் திகதி சகாய ஸ்தானத்திற்கு செல்கிறார். 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன், சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல் - வாங்கல் திருப்தி தரும். 'மங்கல ஓசை மனையில் கேட்கவில்லையே' என்ற கவலை அகலும். வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து அழைப்பு வரலாம். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொண்டால் அல்லல்கள் அகலும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் வரவும், செலவும் சமமாகும். மாதத் தொடக்கத்தில் சேமிப்புகள் கரைந்தாலும், புரட்டாதி 17 ஆம் திகதிக்கு மேல் வருமானம் திருப்தி தரும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு உண்டு. விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பணி புரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு குறையலாம்.

(தொடரும்...)

# அம்பாந்தோட்டையில் 14 வயது சிறுவன் சுட்டுக்கொலை

(கொழும்பு)
அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் ஒருவர் பலியாகியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

வீரகெட்டிய - வெகந்த வெல பகுதியிலேயே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பதிவாகியுள்ளது.

குறித்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 14 வயதுடைய சிறுவன் ஒருவனே இவ்வாறு பலியானதாகவும் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஏன் இடம்பெற்றது என இது வரையில் தகவல்கள் எவையும் வெளியாகவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5)

## மக்களே அவதானம்

# போலி மருந்துகளால் பாரிய ஆபத்து

(கொழும்பு)
நிமோனியா நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் விலை உயர்ந்த Toeillizumab என்ற மருந்து கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளில் ஒன்றாகும்.

எனினும் இந்த மருந்து போலியாக தயாரிக்கப்பட்டு உலகளவில் சட்டவிரோதமாக கடத்தப்பட்டு வருகின்றதாக பெரிய அளவில் மருந்துகளை ஏற்றுமதி செய்யும் மருந்து நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அந்த வகையில் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அனுமதியின்றி குறித்த மருந்து இலங்கைக்கு கொண்டு வரப்படலாம் என்று எச்சரிக்கப்படுகின்றது.

கொவிட் 19 நோய்த் தொற்றுகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக, மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதல் இல்லாமல், அதே பெயரில் போலி மருந்துகள் பல்வேறு நிறுவனங்களால் நாட்டிற்கு கடத்தப்படுகின்றன.

பெரிய அளவில் மருந்துகளை ஏற்றுமதி செய்யும் உண்மையான மருந்து நிறுவனங்கள் இதில் பாரிய ஆபத்து இருப்பதாக சுட்டிக்காட்டுகின்றன.

இந்தப் போலி தடுப்பூசியை உலகில் சில நாடுகள் தற்போது விற்பனை செய்வதாக தகவல் இருப்பதாகவும் இதுபோன்ற மருந்துகளை வாங்கும் மக்கள் அதிக ஆபத்தில் இருக்கக்கூடும் என்றும் அந்த நிறுவனங்கள் கூறுகின்றன.

இதேவேளை மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதியின்றி நாட்டிற்கு கடத்தப்படுகிறது. ஒரு தடுப்பூசி ரூ.500,000 முதல் ரூ.700,000 வரை விற்கப்படுகிறது.

அண்மையில் பொரளையில் ஒரு இடத்தில் இத்தகைய மோசடி பிடிபட்டதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்தத் தடுப்பூசி வரும் பாலும் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களால் நாட்டிற்கு கடத்தப்படுகிறது.

2% - 8% செல்சியஸ் வெப்பநிலையில் இந்த மருந்தை வைத்திருக்க வேண்டும். ஆனால் தடுப்பூசியை சூட்கேஸில் பல மணிநேரங்களுக்கு அத்தகைய வெப்பநிலை இல்லாமல் வைத்திருப்பது தடுப்பூசியின் செயல் திறனைக் குறைக்கும்.

இலங்கையில் இந்த மருந்தை வாங்குவதற்கு அனுமதி கோரப்பட்ட போதும் இன்றும் முடிவின்றி உள்ளது. ஆகவே போலி மருந்தை நம்பி ஏமாற வேண்டாம் என மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# நாடு திரும்பினார் பிரதமர்

(கொழும்பு)
ஜி20 சர்வமத மாநாட்டில் பங்கேற்பதற்காக இத்தாலிக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குழுவினர் நேற்றுக்காலை நாடு திரும்பினர். (நி-5)

# நீராடச் சென்ற இளைஞர்கள் சடலமாக மீட்பு

(ஹற்றன்)
நுவரெலியா- ஹற்றன், வட்டவளை லொனக் பாற் பண்ணை அணைக்கட்டில் நீராட சென்று, நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த இரு இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டவளை தோட்டத்தை சேர்ந்த (38 வயது) சின்னையா ராஜா, புத்தளம் - ஹலாவத்தை பகுதியை சேர்ந்த (21 வயது) சச்சிந்த திஸ்ஷான் ஆகிய இரு இளைஞர்களே நேற்று சடலங்களாக கண்டெடுக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# விலங்குகள் வாழ்ந்து காட்டும்!

ஒரு காடு. அங்கே ஒரு இடத்திலே வரிக்குதிரைகள் கூட்டம் ஒன்று மேய்ந்து கொண்டிருக்கு. அந்த சமயம் பார்த்து பசியோடு ஒரு சிங்கம் அந்தப் பக்கமா வந்தது. அவ்வளவு தான். பார்த்துவிட்டது. விரட்ட ஆரம்பித்தது. கூட்டம் சிதறி ஓடியது. அந்த சிங்கம் ஒரு வரிக்குதிரையைப் பிடித்துவிட்டது அவ்வளவு தான்.

அதன் பின்பு ஏனைய வரிக்குதிரைகள் எல்லாம் கொஞ்சம் கூடப் பயப்படாமல் வழக்கம் போல் மேய ஆரம்பித்துவிட்டது. பயந்து கொண்டு அந்த இடத்தை விட்டே காலி செய்து போய்விடவில்லை.

மனிதனுக்கு ஆறு அறிவு என்கின்றோம். விலங்குகளுக்கு ஐந்து அறிவு என்கின்றோம். இருந்தாலும் மிருகங்களிடம் இருந்து மனிதன் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் நிறைய இருக்கின்றது. முக்கியமாக ஐந்து பாடங்கள் அதுகளிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். முதல் பாடம் விலங்குகளுக்குப் பயம் என்பது மிகக் குறைவு.

மனிதன் தான் எதுக்கெடுத்தாலும் பயப்படுகின்றான்.
நடந்ததை நினைத்துப் பயப்படுகின்றான்.
நடக்கப் போவதை நினைத்துப் பயப்படுகின்றான்.
இல்லாததை நினைத்துப் பயப்படுகின்றான்.
மற்றவர்களைப் பார்த்துப் பயப்படுகின்றான்.
மரணத்தைப் பார்த்துப் பயப்படுகின்றான்.
ஆனால் விலங்குகள் இப்படி இல்லை.

தங்கள் உயிருக்கு ஆபத்து வருமோ... அப்படி என்ற நிலையில் தான் விலங்குகள் பயப்படும். ஆபத்து நீங்கிப் போய்விட்டது என்றால், அதன் பின்பு கவலைப்படாமல் எப்போதும் போல வாழ ஆரம்பித்துவிடும். இது நாம் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பாடம். அடுத்தது, விலங்குகள் தோல்வியைக் கண்டு கவலைப்படுவதில்லை. மனிதர்களிலே தவறவிட்ட பேருந்திற்காக கவலைப் படுபவன் உண்டு. பரீட்சையில் தோல்வியா... கவலை தேர்தலிலே தோல்வியா... கவலை... ஒரு வாய்ப்பு நழுவிப் போய்விட்டதா... உடனே கவலை...

ஒரு பூனை ஒரு எலியைத் துரத்திக் கொண்டு ஓடுகின்றது. எலி சாமர்த்தியமாக வளைக்குள்ளே புகுந்து தப்பித்துக் கொண்டது. உடனே அந்தப் பூனை நாம் தோற்றுப் போய்விட்டோமே என்று ஒரு மூலையில் உட்கார்ந்து அழுவதில்லை. போகின்றவர்கள் வருகின்றவர்களிடம் எல்லாம் சொல்லி புலம்புவதில்லை. மறுபடியும் வேட்டையாடி தனக்குத் தேவையான எலியைப் பிடித்துக்கொள்ளும்.

மூன்றாவது, விலங்குகள் குழந்தைகளை முறையாக வளர்க்கின்றது. இது ஆச்சரியமான ஒரு செய்தி தான். விலங்குகள் அதுகளோட குட்டிகளுக்கு ஆரம்ப காலத்திலே அதுகளே உணவு கொண்டு வந்து கொடுக்கின்றது. குட்டி கொஞ்சம் வளர்ந்த பிறகு எப்படி வேட்டையாடுவது எப்படி நீந்துவது எப்படி ஓடுகின்றது என்னும் விவரமெல்லாம் சொல்லிக் கொடுத்து விடும்.

அதன் பின்பு குட்டிகள் எல்லாம் தானாக பிழைத்துக் கொள்ளட்டும் என்னும் முடிவு செய்து அவைகளை தனியாக விட்டுவிடும். அப்புறம் குட்டிகளைத் திரும்பிக் கூட பார்ப்பதில்லை. குட்டிகளும் தனித்துப் போராடி வாழ்ந்து காட்டும். மனிதன் அப்படி இல்லை.

மகனையும் விடுவதில்லை. பேரனையும் விடுவதில்லை. கடைசி வரைக்கும் கூடவே இருந்து கொண்டு அப்படிச் செய் இப்படிச் செய் என்று சொல்கின்றனர். உனக்கு அனுபவம் பத்தாது பெரியவர்கள் சொல்வதைக்கேள். இப்படி ஏதாவது சொல்லிக் கொண்டு அடுத்த தலைமுறையின் சுயமான வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் முட்டுக் கட்டை போடுவது மனிதனுடைய இயல்பு. விலங்கு கள் இப்படி இல்லை.

நாலாவது, விலங்குகள் எதிர்காலத்தை நினைத்து அஞ்சுவதில்லை. நாளைக்கு நல்லபடியாக விடியணுமே என்னும் கவலை நமக்குத் தான். எதிர்காலம், அடுத்த தலைமுறை இப்படி கற்பனை செய்து, பயந்து அதற்காக சேமிக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்குப் படாத பாடுபடுகின்றான்.

சிங்கம் பசி எடுத்த பிறகு தான் இரை தேடவே ஆரம்பிக்கும். அவ்வளவு தன்னம்பிக்கை. பறவைகள் மழைக்காலம் வந்துவிட்டால் தேவைப்படுமோ என்பதற்காக மட்டும் கொஞ்சம் சேர்த்து வைப்பது உண்டு. எப்பவோ வரப்போகின்ற தேவையைக் கண்டு இப்பவே நடுங்குவது கிடையாது. நிகழ்காலத்தில் வாழக் கற்றுக்கொள்ளுங்கள் என்று பெரிய ஞானிகள் எல்லாம் நமக்கு புத்திமதி சொல்கின்றார்கள். விலங்குகள் ஏற்கனவே அப்படித் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

ஐந்தாவது விடயம் விலங்குகள் அதுவும் வாழும் அடுத்ததையும் வாழ விடும். எலியும் பூனையும், சிங்கமும் மானும் எதிரிகள் தான். இருந்தாலும் தேவைக்கு மீறி பசிக்கு அதிகமாக எந்த விலங்குகளையும் கொல்வதில்லை. காடுகளில் எல்லா விலங்குகளும் வாழுவதற்கு இந்த சகிப்புத் தன்மை தான் காரணம். இப்படி இதெல்லாம் நாம் விலங்குகளிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்.

இவ்வளவையும் கேட்டுக் கொண்டு எங்களில் ஒருத்தன் சொன்னான். சேர் நான் நாயிடமிருந்து ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக் கொண்டான். என்றான். என்ன? என்று கேட்டேன். அவன் தன் காலிலே போட்டிருந்த பெரிய கட்டை அதாவது பேண்டேஜை காட்டிச் சொன்னான். இனிமேல் தனியாக ஒரு நாய் நின்றுக் கொண்டிருந்தால் விளையாட்டாகக் கூட அதை ஒரு கல்லாலே அடிக்கப்படாது என்கின்ற பாடத்தைக் கற்றுக் கொண்டேன் என்றான்.




# இரண்டு தேவதைகள்



நயாகரா நீர்வீழ்ச்சி இடைவிடாமல் பாய்ந்து கொண்டிருந்தது.

நீர்வீழ்ச்சியின் அழகை, இரண்டு தேவதைகள் வெகுநேரமாக ரசித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, அனிலஸ் என்ற பறவை, அந்த நீர்வீழ்ச்சியின் அருகே வந்தது. தேவதைகள் இருவரும் அந்தப் பறவையைப் பார்த்தனர்.

"அதோ பார் அனிலஸ் பறவை நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்காக வந்துள்ளது," என்றது ஒரு தேவதை.

"ஆமாம்... ஆமாம்... அனிலஸ் பறவை, பன்னிரண்டு வருடத்திற்கு ஒருமுறை தான் நீராடும். அது நீராடுகிற காட்சியைக் காண்பதற்கே கொடுத்து வைத்திருக்க வேண்டும்.


ஒரு வகையில் நாம் இருவருமே யோகம்செய்தவர்களாக இருக்கிறோம்..." என்றது மற்றொரு தேவதை.

அனிலஸ்பறவையோ, தன் அருகே இரண்டு தேவதைகள் நின்று கொண்டிருப்பதை கவனித்தபடியே, பாய்ந்தோடும் நீர்வீழ்ச்சியில் இன்பமாக குளித்தது.

அதே நேரத்தில், நீர்வீழ்ச்சியின் வேகம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. நீர் வேகமாகத் தரையை நோக்கிப் பாயத் தொடங்கியது. வேகமாக இழுப்பு விசையோடு பாய்ந்த நீர், அனிலஸ் பறவையையும் தள்ளிக்கொண்டு சென்றது.

இதை எதிர்பாராத அனிலஸ் பறவை, தடுமாறியபடி பாய்ந்தோடும் நீரில் சிக்கிக் கொண்டது. அதைக் கண்ட தேவதைகள் இருவரும் திடுக்கிட்டனர். (தொடரும்)

# மகாபாரதம்



190

பாரத்வாஜர்

பீஷ்மர் தருமருக்கு இப்படி உரைத்தார்.

**ஆபத்து காலத்தில் மன்னர் நடக்கும் முறை**

யுக மாறுபாட்டால் தருமம் குன்றித் திருடர்கள் மலிந்து விட்டால், அத்தகைய ஆபத்துக் காலத்தில் மன்னன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? என தருமர் வினவ பீஷ்மர் உரைக்கிறார்.

"தருமா...இது பற்றி முன்னொரு காலத்தில் சத்ருந்தபன் என்னும் மன்னனுக்கும், பாரத்வாஜருக்கும் நடந்த உரையாடலை உனக்கு உனக்குச் சொல்கிறேன்... கேள்.

சௌவீர தேசமன்னனான சத்ருருந்தபன் பாரத்வாஜரிடம்சென்று, "பெற முடியாத ஒரு பொருளைப் பெறுவது எப்படி?பெற்றபொருளை வளரச்செய்வதுஎப்படி? வளர்ந்த பொருளைப் பயன்படுத்துவது எப்படி? என வினவினான்.

அது கேட்ட பாரத்வாஜர் அறிவுரை அருளினார். மன்னன் தண்டிப்பதில் உறுதியாய் இருக்க வேண்டும். தண்டனையைக் கண்டு மனிதன் பயப்படுவான்.

ஆதலால் அனைவரையும் தண்டனையினாலேயே அடக்கி வைக்க வேண்டும். அப்போதுதான் நாட்டில் அமைதிநிலவும்.

நாட்டில் அமைதி நிலவினால்தான் நல்ல பல திட்டங்களை ஒழுங்காக நிறைவேற்ற முடியும். ஆகையால்தான் சாமதான பேததண்டம் ஆகிய நான்கில் தண்டம் முக்கியமானது என அரசியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

பெரிய மரத்தின் வேர் அறுபட்டால் கிளைகள் எங்ஙனம் இருக்கும். அது போல பகைவரின் ஆணிவேரை முதலில் அறுக்க வேண்டும்.

பின்னர் அவனுக்குத் துணையாக இருப்பவரை அழிக்க வேண்டும். ஆபத்துக் காலத்தில் அரசன் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். ஆற்றலுடன் போரிட வேண்டும்.

ஆற்றலுடன் பின்வாங்கவும் தயாராய் இருக்க வேண்டும்.பின்வாங்கத் தயங்கக்கூடாது. பணிவான சொற்களைப் பேச வேண்டும். விருப்பு, வெறுப்புகளுக்கு ஆட்படாமல் செயல்பட வேண்டும்.

(தொடரும்)

> தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றிய கவலைப்பட வேண்டும்.
> — அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஏற்படப்போகும் பெரும் பஞ்சத்தை வெற்றிகொள்ள நெல் விதையுங்கள்

*உழுதுண்டுவாழ்வாரே வாழ்வார்மற்றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்*

என்பது வள்ளுவன் நமக்குத் தந்த அறிவுரை.

ஆம், எத்தொழில் செய்யினும் நெல் விதைத்து அறுவடை செய்து நெற் தானியம் கொண்ட மூடைகளை வீட்டில் அடுக்கி வைத்து, அதிலிருந்து நமக்கான உணவைப் பெற்றுக் கொள்வதுடன் மற்றவர்களுக்கும் கொடுத்து அவர்களின் பசியாற்றி பல்லுயிர் ஓம்பும் அறத்தைச் செய்ய வேண்டும் என்பது வள்ளுவனின் உபதேசமாகும்.

நெல் வீட்டில் இருந்தால் பசி இருக்காது என்று நம் முன்னோர்கள் கூறிக்கொள்வதைக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

தவிர, முன்பெல்லாம் நம் தமிழர் வீடுகளில் புதிர்எடுத்து நெல் மணிகள் அடங்கிய கதிர்களை ஒன்றுசேர்த்து, வீட்டில் காட்சிப்படுத்துகின்ற சம்பிரதாயம் நடைமுறையில் இருந்தது.

இதனை இப்போதும் சில வீடுகள் நினைவுபடுத்துகின்றன.

இவ்வாறு புதிர் எடுத்த நெற்கதிர்களை வீடுகளில் காட்சிப்படுத்துவதற்குள் இருக்கக் கூடிய அர்த்தங்கள் அற்புதமானவை.

ஆம், வீட்டுக்கு வருகின்றவர் அங்கு இருக்கக்கூடிய நெற்கதிர்களைக் கண்டு உலவிதம் இல்லாது இங்கு பசியாற முடியும் என்பதை எடுத்துரைப்பதாக அமைவது ஓர் அர்த்தம்.

தவிர, நெல் நவதானியங்களில் முதன்மையானது. செல்வத்தின் அடையாளம்.

ஆக, நெற்கதிர்களைக் காட்சிப்படுத்துவதினூடாக இங்கு இலட்சுமி வாசம் செய்கிறாள் என்ற அர்த்தப்பாடும் உணர்த்தப்படுகிறது.

இவ்வாறாக பசியாற்றும் அன்னத்தை வீட்டில் வைத்திருப்பதன் மூலம் கலக்கமற்ற – ஏக்கமற்ற சீவியத்தை நடத்த முடியும்.

எனினும் சமகாலத்தில் அனைத்து உணவுப்பொருட்களையும் வர்த்தக நிலையங்களில் கொள்வனவு செய்வதை நாம் வாடிக்கையாக்கிவிட்டோம்.

அரிசி மட்டுமன்றி, முக்கனிகள் உட்பட எதுவும் எங்கள் வயலில், வீட்டில் விளைவதில்லை என்பதுதான் மிகவும் வேதனைக்குரிய விடயம்.

எனவே இந்த நிலைமையில் இருந்து நாம் மீள வேண்டும். எம் முன்னோர்களின் பாதையில் இயற்கையின் உதவியோடு, நெற் செய்கையில் அனைவரும் ஈடுபட வேண்டும்.

ஒரு துண்டு வயல் நிலமேனும் பயிர்ச் செய்கையின்றி வானம் பார்த்த பூமியாக இருக்கக்கூடாது என்பதில் ஒவ்வொரு ஊரிலும் உள்ள கமக்காரர் அமைப்புகள் விழிப்பாக இருப்பது அவசியம்.

இவ்வாறாக நெல் விதைப்பில் நாம் ஈடுபடும்போது, வீட்டில் சேருகின்ற குப்பைகூழங்களை வயலுக்குப் பசளையாக்கவும் வீட்டுக்கொரு பசுவளர்த்து பசும்பாலைப் பெற்றுக் கொள்ளவும் வயலில் கிடைக்கும் வைக்கோலை அதற்கு உணவாகவும் பயன்படுத்தக் கூடிய முயற்சிகள் தன்பாட்டில் தளைக்கும்.

ஆகையால் நெற்செய்கையில் நம் மக்களை ஈடுபடுத்துகின்ற பெரு முயற்சியை சம்பந்தப்பட்டவர்கள் மனவிருப்போடு முன்னெடுப்பது காலத்தின் அவசிய தேவை.

# யாழ்.பல்கலை பட்டமளிப்பை நிகழ்நிலையில் நடத்த ஏற்பாடு

### மாணவர்கள் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பை நிகழ்நிலையில் நடத்துவதை முழுமையாக நிராகரிக்கின்றோமென யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலே இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையிலே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பட்டமளிப்பு விழா பகுதி இரண்டானது செப்ரெம்பர் 16,17,18 ஆம் திகதியில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் தற்போதைய கொரோனா ஊரடங்கு காரணமாக ஒக்ரோபர் 7,8,9ஆம் திகதிகளில் நடத்துவதாக பிற்போடப்பட்டது. எனினும் அந்த திகதிகளில் மாணவர்களை நேரில் அழைத்து பட்டமளிப்பை நடத்துவதற்கு சுகாதார அமைச்சினால் அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் அதனை ஒக்ரோபர் 7ஆம் திகதி நிகழ்நிலையில் நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

எனினும் இத் தீர்மானம் தொடர்பாக மாணவர்கள் மத்தியில் விருப்பமின்மை காணப்படுகின்றது. இதுதொடர்பாக நாம் கடந்த 15 ஆம் திகதி துணைவேந்தருக்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தோம். எனினும் துணைவேந்தரிடம் இருந்து சாதகமான பதில் எமக்கு கிடைக்கவில்லை. எனவே நாடு முழுவதும் வழமைக்கு திரும்பிய பின்னர் நேரடியாக பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்கே மாணவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். எனவே பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தாமல் நேரடியாக மாணவர்களை அழைத்து பட்டமளிப்பு விழாவை நடத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்தை கோருகின்றோம் என்றுள்ளது.

(ம-3,33)

# மன்னார் விடத்தல்தீவில் வீடு புகுந்து தாக்குதல்

### மூவர் படுகாயம்

(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள விடத்தல்தீவு 5 ஆம் வட்டாரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் மதுபோதையில் அத்துமீறி நுழைந்த சுமார் 15 பேர் கொண்ட குழுவினர் குறித்த வீட்டில் உள்ளவர்கள் அனைவரையும் கடுமையாக தாக்கிச்சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த வீட்டின் உரிமையாளரான அன்ரனி ஜோசப் (வயது-44) என்பவர் படுகாயமடைந்த நிலையில் பள்ளமடு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த வீட்டில் உள்ள 18 வயதுடைய இதய நோய் உள்ள யுவதி ஒருவரையும் 15 வயதுடைய மாணவி ஒருவரையும் தாக்கியுள்ளதுடன், குறித்த இரு யுவதிகளும் தற்போது பள்ளமடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த வீடு கடுமையாக தாக்கப்பட்டு சேதமடைந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதிக்குச் சென்ற அடம்பன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதோடு வீடு புகுந்து தாக்குதல் மேற்கொண்ட நபர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,285)

# கரணவாயில் குடுவுடன் இளைஞன் கைது

கரணவாய் பகுதியில் 40 மில்லிகிராம் குடு பவுடருடன் உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் நெல்லியடி புலனாய்வுத்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 5.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைதானவர் விசாரணைக்காக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் இன்று பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,60)

## மருத்துவக் குறிப்பு

வேம்பாளம் பட்டையை பொடி செய்து தேங்காய் எண்ணெயில் கலந்து தினமும் தலைக்குத் தடவிவர இளநரை சீக்கிரத்தில் மறையும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## கடமையும் விளையாட்டுத் தான்

❖ கோபத்தில் மனிதன் பலருக்கும் அநீதிஇழைக்கிறான். நியாயமான கோபம் என்றே ஒன்று கிடையாது. உலகம் அனைத்தையும் சமமாகக் காணத் தவறும்போது தான் கோபமே உண்டாகிறது.

❖ பயமின்றி இருப்பதே வாழ்வின் ரகசியம். என்ன நேருமோ என்று ஒருபோதும் கலங்கி நிற்பது கூடாது. ஒருவரையும் சார்ந்து இருக்க கூடாது. பிறரிடமிருந்து எந்த உதவியையும் எதிர்பார்க்காத போது தான் சுதந்திரத்தை உணர முடியும்.

❖ சுயநலமில்லாமல் தன்னை மறந்த நிலையில் தான் மனிதன் மிக மேலான மகிழ்ச்சியைப் பெற முடியும்.

❖ பரபரப்பு, பதட்டத்துடன் செயல்படாதீர்கள். சுதந்திர உணர்வுடன் பணியாற்றுங்கள். இந்த உலகம் வெறும் பயிற்சிக்கூடம். அதில் நாம் விளையாடுகிறோம் அவ்வளவு தான்.

❖ மனம் ஆசையை வளர்த்துக் கொண்டு சஞ்சலப்படுகிறது. கடலில் அலை எழுவது போல ஆசை எப்போதும் மனக்கடலில் எழுந்தபடி இருக்கிறது.

❖ ஆசை என்பது தங்கமுலாம் பூசியிருக்கும் விஷ உருண்டை என்பதை உணர்ந்து கொள்.

# மாகாண சபைத் தேர்தல்கள்

42

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



அட்டவணை 40

வட மாகாண சபைத் தேர்தல் -2013

கட்சிகள் பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை

| மாவட்டம் | கட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | ததேகூ | ஐமசுமு | SLMC | மொத்தம் |
| யாழ்ப்பாணம் | 14 | 2 | - | 16 |
| கிளிநொச்சி | 3 | 1 | - | 4 |
| மன்னார் | 3 | 1 | 1 | 5 |
| வவுனியா | 4 | 2 | - | 6 |
| முல்லைத்தீவு | 4 | 1 | - | 5 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 30 | 7 | 1 | 38 |

ஐமசுமு- ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி, ததேகூ- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, SLMC-ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

## மாகாண சபைத் தேர்தல் 2014

2014 ஆம் ஆண்டினுள் மேல், தென் மற்றும் ஊவா மாகாணங்களின் மூன்று மாகாண சபைகளும் கலைக்கப்பட்டதோடு, அதற்கிணங்க தேர்தல்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேல் மற்றும் தென் மாகாண சபைகள் 1844/75 மற்றும் 1844/76 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டன.

அதற்கிணங்க மேல் மற்றும் தென் மாகாணங்களுக்குட்பட்ட கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய நிர்வாக மாவட்டங்களுக்கான வேட்புமனு அறிவித்தல் 2014.01.16 ஆம் திகதிய 1845/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. ஊவா மாகாண சபை 1870/64 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2014.07.11 ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டது. அதற்கிணங்க ஊவா மாகாணத்திற்குட்பட்ட பதுளை மற்றும் மொனராகலை ஆகிய நிர்வாக மாவட்டங்களுக்கான வேட்புமனு அறிவித்தல் 2014.07.16 ஆம் திகதிய 1871/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

அதற்கமைய மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்காக 2014.01.30 ஆம் திகதி தொடக்கம் 2014.02.06 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரையும், ஊவா மாகாண சபைக்காக 2014.07.30 ஆம் திகதி தொடக்கம் 2014.08.06 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரையும் உரிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களின் வேட்புமனுக் கையேற்பு மேற்கொள்ளப்பட்டது.

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்காக 129 வேட்புமனுக்கள் கிடைக்கப்பெற்றதோடு. அவற்றில் 06 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட 123 வேட்புமனுக்களின் கீழ் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சார்பாக 3794 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

பொதுவாக நோக்கும் போது மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்காக 24 அரசியல் கட்சிகளும் மற்றும் 42 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டன. இரண்டு மாகாணங்களிலும் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 5, 898,428 ஆகக் காணப்பட்டதோடு 4253 வாக்கெடுப்பு நிலையங்களில் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி வாக்களிப்புக்கள் நடத்தப்பட்டன.

இத் தேர்தலின் போது ஆறு மாவட்டங்களிலும் 14 வாக்கெடுப்பு நிலையங்கள் நிறுவப்பட்டபோது அவற்றில் 569 சாதாரண வாக்கெண்ணல் மண்டபங்களும் 59 அஞ்சல் வாக்கெண்ணல் மண்டபங்களும் காணப்பட்டன. இவ் வாக்கெண்ணல் நிலையங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் தலைமை அலுவலகத்தில் மீள் பரிசீலனை செய்யப்பட்டு தேர்தல்கள் ஆணையாளரினால் சான்றுறுதிப் படுத்தப்படுத்தப்பட்டது. சான்றுறுதிப் படுத்தப்படுத்தப்பட்ட பெறுபேற்று அறிக்கைகள் தகவல் பணிப்பாளரினூடாக இலத்திரனியல் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டதோடு அவற்றின் மூலம் ஒளிபரப்பு/ஒலிபரப்புச் செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து தேர்ந்திதெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 60 ஆம் பிரிவின் கீழ் தேர்தல்கள் ஆணையாளரினால் 1856/9 ஆம் இலக்க 2014.04.01 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

ஊவா மாகாண சபைக்காக 33 வேட்புமனுக்கள் கிடைக்கப்பெற்றதோடு அனைத்து வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட 33 வேட்புமனுக்களின் கீழ் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சார்பாக 617 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

ஊவா மாகாண சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட 14 அரசியல் கட்சிகள் மற்றும் 11 சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டன. மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 942,730 ஆகக் காணப்பட்டதோடு 834 வாக்கெடுப்பு நிலையங்களில் 2014 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி வாக்களிப்புக்கள் நடத்தப்பட்டன.

இத் தேர்தல்களின் போது வாக்கெடுப்புக்கு முந்திய காலப்பகுதிக்குள் பிரச்சனைகளும் இடையூறுகளும் நிலவிய ஒரு சூழ்நிலை காணப்பட்ட போதிலும் வாக்கெடுப்புத் தினம் அமைதியாக காணப்பட்டது. சிறு சிறு நிகழ்வுகள் அறிவிக்கப்பட்ட போதிலும் வாக்கெடுப்பை நடத்திச் செல்வதற்கு தடங்கல் களை ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு நிகழ்வு தொடர்பாகவும் அறிவிக்கப்படவில்லை. முக்கியமாக தேசிய அடையாள அட்டை வாக்கினைப் பிரயோகிப்பதற்கான கட்டாயத் தேவைப்பாடொன்றாக விதிக்கப்பட்டிருந்தமை ஆள் மாறாட்ட வாக்களிப்புத் தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகள் குறைந்த மட்டத்தில் காணப்பட ஏதுவாயிற்று.

## மேல் மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் -2014

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்திற்காக 18 அரசியல் கட்சிகள் மற்றும் 11 சுயேச்சைக் குழுக்களும் கம்பஹா மாவட்டத்திற்காக 13 அரசியல் கட்சிகள் மற்றும் 9 சுயேச்சைக் குழுக்களும், களுத்துறை மாவட்டத்திற்காக 13 அரசியல் கட்சிகள் மற்றும் 9 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டன. தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 104, இரண்டு Bonus உறுப்பினர்களுடன் ஆகும். 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றது.

2014 ஆம் ஆண்டின் மேல் மாகாணசபைத் தேர்தலில் பின்வரும் கட்சிகள் போட்டியிட்டன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (ஐமசுமு), ஐக்கிய தேசியக் கட்சி (ஐதேக), ஜனநாயகக் கட்சி (DP), மக்கள் விடுதலை முன்னணி (JVP), ஜனநாயக மக்கள் முன்னணி(ஜமமு),ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC), அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ACMC), இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனசெத பெரமுன,எக்ஸத் லங்கா பொதுஜன பக்சய,தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி, நவசம சமாஜக் கட்சி, எக்ஸத் லங்கா மஹா சபா, புதிய ஜனநாயக முன்னணி, ஐக்கிய சோசலிச கட்சி, ஒக்கொம வெஸியோ ஒக்கொம ரஜவரு அமைப்பு, ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி, நமது தேசிய முன்னணி,ஐக்கிய சமாதான முன்னணி, நவ சிஹல உறுமய,சோசலிச சமத்துவக் கட்சி, சுயேட்சைக் குழுக்கள் ஆகியன போட்டியிட்டன. ஐக்கிய சோசலிச கட்சி, ஒக்கொம வெஸியோ ஒக்கொம ரஜவரு அமைப்பு, நவ சிஹல உறுமய, ஆகிய 3 கட்சிகள் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடவில்லை. கொழும்பு மாவட்டத்தில் 11 சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்,புதிய ஜனநாயக முன்னணி, ஐக்கிய சோசலிச கட்சி, ஒக்கொம வெஸியோ ஒக்கொம ரஜவரு அமைப்பு, நமது தேசிய முன்னணி, ஐக்கிய சமாதான முன்னணி, சோசலிச சமத்துவக் கட்சி ஆகிய 8 கட்சிகள் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடவில்லை. கம்பஹா மாவட்டத்தில் 9 சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டன.

ஜனநாயக மக்கள் முன்னணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், நவசம சமாஜக் கட்சி, புதிய ஜனநாயக முன்னணி, நமது தேசிய முன்னணி, ஐக்கிய சமாதான முன்னணி, நவ சிஹல உறுமய, சோசலிச சமத்துவக் கட்சி ஆகிய 8 கட்சிகள் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிடவில்லை. களுத்துறை மாவட்டத்தில் 9 சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டன.

(தொடரும்...)

## இணுவிலில்...

நடத்திய தாக்குதலில் இருவர் படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

காரைக்கால் சிவன் கோவிலடியில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இருவர் கதைத்துக் கொண்டிருந்தபோது மோட்டார் வாகனத்தில் வந்த 5க்கு மேற்பட்ட நபர்கள் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர். காயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## 93...

மேலும் 93 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 12,218 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## குழந்தை பிரசவி...

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நிமோனியா காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவுக்கு மாற்றப்பட்ட நிலையில் அவருக்கு அங்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கிளிநொச்சி தர்மபுரத்தில் வசித்து வந்த 27 வயதான அஜந்தன் துஷ்யந்தினி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், பிறந்த குழந்தை சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3,316)

## கிளிநொச்சியில்...

அலுவலர் ஒருவர் கடந்த 16ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் இரு நாட்களுக்குமுன் குறித்த கிராமத்தில் அவருடைய இறுதி நிகழ்வுகள் அவரின் வீட்டில் நடைபெறும் என்று ஒலிபெருக்கி ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் சமூக ஆர்வலர்களாலும் அரச உத்தியோகத்தர்களாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கோவிட்டால் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்ட குறித்த மரணம் நிகழ்ந்த வீட்டில், கோவிட்டால் உயிரிழந்தவரின் சடலத்தை மக்கள் அஞ்சலிக்காக அனுமதிக்கின்றபோது அங்கு செல்கின்ற மக்கள் ஊடாக மீண்டும் கோவிட் பரவல் ஏற்படும் அபாயம் உள்ளதாக அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இருந்தபோதிலும் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் அவரின் சடலம் வவுனியாவில் உள்ள பூந்தோட்டம் மயானத்திற்கு எடுத்துச் செல்வதாக தெரிவிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது.

இருந்தபோதிலும் வாகனம் வவுனியா செல்வதற்குப் பதிலாக உதயநகர் கிழக்கில் உள்ள அவருடைய வீட்டிற்குச் சென்றிருக்கின்றது.

அங்கு நின்றிருந்த நூற்றுக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காகத் திரண்டிருந்தனர்.

குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் அங்கிருந்து புறப்பட்ட வாகனம் மீளவும் வவுனியாவிற்குச் சென்றது.

இதனிடையே, கோவிட்டால் உயிரிழப்பவர்களை எரியூட்டும் இடத்தில்கூட மூன்று அல்லது நான்கு பேருக்கு மட்டுமே தூரத்திலிருந்து பார்க்க அனுமதிக்கப்படுவது நடைமுறையாகும்.

அதேபோல் சடலத்தை எரியூட்டுபவர்கள்கூட முழுமையாக கோவிட் பரவலைத் தடுக்கும் வகையிலான ஆடைகளை அணிந்துகொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருப்பர்.

ஆனால் மரணச் சடங்குகளில் பங்குகொண்ட மக்கள் முகக் கவசம் தவிர வேறெந்த பாதுகாப்பினையும் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## +1,509...

தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 506,000 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## மரணமான...

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த பெண்ணுக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## பொதுமன்னிப்பில்...

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையகத்தில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதிக்கும் ஐ.நா பொதுச் செயலாளருக்கும் இடையிலான சிறப்புச் சந்திப்பின்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

30 வருட காலமாக நிலவிய போரை முடிவுக்குக் கொண்டுவந்ததன் பின்னர் ஏற்பட்ட இடைநிலைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாகத் தெளிவுபடுத்தினார்.

பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்கல், காணிகளை மீளக் கையளித்தல் மற்றும் 2009ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின்கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட பெரும் அபிவிருத்திகள் மற்றும் வடக்கு மாகாண சபைக்கான உறுப்பினர்களை ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுப்பதற்காக ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்பு தொடர்பிலும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

காணாமற்போனோர் தொடர்பில், அரசு என்ற ரீதியில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுப்பதாகவும் இறப்புச் சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதாகவும் பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி தெரிவித்தார்.

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இளைஞர்களில் பலரை, தான் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் விடுவித்துள்ளதாக எடுத்துரைத்த ஜனாதிபதி,

அவ்வாறு விடுவிக்க முடியாத ஏனையோர் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருவதாகவும் நீண்ட காலமாகத் தடுப்பிலுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பிலான சட்டச் செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர், நீண்டகாலம் தடுப்பில் இருந்ததைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் அவர்களை விடுவிப்பதற்குத் தான் தயங்கப் போவதில்லை என்றும் பொதுச் செயலாளரிடம் தெரிவித்தார்.

இலங்கைக்குள் மிகவும் பலமான முறையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே தன்னுடைய இலக்கு என்றும் அதன்படி, போராட்டக்காரர்கள் மீது முன்னரைப்போன்று தடியடி, நீர்த்தாரைத் தாக்குதல் போன்றவற்றை நடத்த, தன்னுடைய ஆட்சியின்கீழ் ஒருபோதும் அனுமதியில்லை என்றும் போராட்டக்காரர்களுக்கென்றே, தன்னுடைய அலுவலகத்துக்கு முன்னால் தனி இடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளதென்றும் ஜனாதிபதி தெரிவித்தார் என்றுள்ளது. (ம-3)

## உள்ளக பொறி...

தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதிக்கும் ஐ.நா பொதுச் செயலாளருக்கும் இடையிலான விசேட சந்திப்பின் போதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

இனங்களுக்கிடையில் ஒற்றுமையை பலப்படுத்திக்கொண்டு முன்னோக்கி நகர்வதற்கான முழுமையான ஒத்துழைப்பை, மிகவும் நேர்மறையான முறையில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு வழங்குமென்று, அதன் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்தார். (ம-3)

## ஐ.நாவின் ஒத்து...

பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐ.நா சபையின் உயர்ந்தபட்ச ஒத்துழைப்பை இலங்கைக்கு தான் பெற்றுத்தருவதாக ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

இனங்களுக்கிடையில் ஒற்றுமையை பலப்படுத்திக்கொண்டு முன்னோக்கி நகர்வதற்கான முழுமையான ஒத்துழைப்பை மிகவும் சாதகமான முறையில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு வழங்கும் என்று அதன் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஐ.நா பொதுச் செயலாளர் உடனான விசேட சந்திப்பின் போதே அவர் இதனை ஜனாதிபதியிடம் தெரிவித்தார். (ம-3)

### பிசிஆர் குறைக்கப்பட்டமை

# மற்றொரு அலைக்கு காரணமாக அமையலாம்

### ரவி குமுதேஷ் தெரிவிப்பு

(கொழும்பு)

கோவிட் பரிசோதனைகளை குறைத்துள்ளதன் காரணமாக தற்போது காணப்படும் நிலைமையை விஞ்ஞானபூர்வமாக அறிய முடியாது எனவும் பரிசோதனைகள் குறைப்பட்டுள்ளமையானது மற்றுமொரு கோவிட் அலை ஏற்பட வழிவகுக்கலாம் எனவும் இரசாயன ஆய்வுகூட தொழில் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

மூன்று காரணங்களால் கொழும்பில் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கலாம். தடுப்பூசி செலுத்தியமை மற்றும் அதிகளவானோர் தொற்றுக்கு உள்ளாகாமை என்பன இரண்டு பிரதான காரணங்கள்.

கோவிட் குறையும் வேகத்தைவிட கூடிய வேகத்தில் பரிசோதனைகள் குறைபட்டுள்ளமை இதற்கு காரணம். பரிசோதனைகளை குறைக்கப்பட்டுள்ளதால், தற்போதைய நிலைமையை விஞ்ஞான ரீதியாக சரியாக கணக்கிட முடியவில்லை.

இதனால், தொற்று நோய் தொடர்பில் தவறாக புரிதல் ஏற்படுவதுடன்அது மீண்டும் ஒரு அலை ஏற்பட காரணமாக அமையலாம் என்றார். (ம-3)

## பொறுப்பற்று...

விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளது. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இந்நிலையில் மதுபானசாலைகளை திறப்பதற்கு இடமளிக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ளமுடியாத விடயமாகும். மதுபானசாலைகளைத் திறப்பதற்கு கலால் திணைக்கள அதிகாரிகளின் அனுமதி அவசியம். அவர்களின் அனுமதியின்றி அதனைச் செய்ய முடியாது.

எனவே, மதுபானசாலைகள் திறக்கப்படுவதால் அதன்மூலம் மக்களுக்கு கொரோனா பரவும் அபாயம் உள்ளது.

எதிர்காலத்திலும் இந்நிலைமை தொடர்ந்தால் ஆரம்பித்த இடத்துக்கே மீண்டும் செல்லவேண்டிவரும். மாற்று வழியில்லை. மதுபானசாலைகளை திறப்பதற்கு அனுமதி வழங்கும் அதிகாரிகள் அவதானமாகவே இருக்க வேண்டும். மேற்கூறப்பட்ட நிலைமை ஏற்படுவதற்கு இடமளிக்கக்கூடாது" என்றார். (ம-3)

## மரணச் சான்றி...

இடையிலான விசேட சந்திப்பின்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பில், அரசாங்கம் என்ற ரீதியில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுப்பதாகவும் மரணச் சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதாகவும் பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் இலங்கைக்குள் மிகவும் பலமான முறையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே தன்னுடைய இலக்கு என்றும் அதன்படி, போராட்டக்காரர்கள் மீது முன்னரைப் போன்று தடியடி, நீர்த்தாரைத் தாக்குதல் போன்றவற்றை நடத்த, தன்னுடைய ஆட்சியின்கீழ் ஒருபோதும் அனுமதியில்லை என்றும் போராட்டக்காரர்களுக்கென்றே, தன்னுடைய அலுவலகத்துக்கு முன்னால் தனி இடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளதென்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-3)

### தமிழின அழிப்பிற்கு நீதிகோரி

# ஐ. நா முன்றலில் புலம்பெயர் தமிழர்கள் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம்



(ஜெனிவா)

ஜெனிவாவில் உள்ள ஐ.நா முன்றலில் புலம்பெயர் வாழ் ஈழத்தமிழர்கள் இணைந்து மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

48ஆவது ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில் தமிழின அழிப்பிற்கு நீதி கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுவிட்சர்லாந்து நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இருந்தும் பெருந்திரளான மக்கள் வருகை தந்து இந்த போராட்டத்தைமுன்னெடுத்தனர். (ம-03)

### பளை இயக்கச்சியில்

# இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(பளை)

கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இயக்கச்சி பகுதியில் நேற்று இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இயக்கச்சியில் ஏ9 வீதி அருகே உள்ள பராமரிப்பு இல்லாத தனிநபர் ஒருவரின் காணியிலேயே தூக்கில் தொங்கிய நிலையில் குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் கிளிநொச்சிமாவட்ட பளை இயக்கச்சி பகுதியில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான காசிநாதர் கஜிதரன் என்வரா வார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-03)

# பூஸா சிறைச்சாலையில் 28 கைதிகளுக்கு கொரோனா

(கொழும்பு)

பூஸா சிறைச்சாலையில் மேலும் 28 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

குறித்தசிறைச்சாலையில் 38 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே 28 கைதிகளுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தொற்றாளர்களுடன் தென் மாகாணத்தில் சிறைச்சாலை தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,640 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-03)


**உடனடி வேலைவாய்ப்பு**

வலி.வடக்கு, வலி.தெற்கு பகுதிகளில் வசிக்கும் இளைஞர், யுவதிகளுக்கு உடனடி வேலை வாய்ப்புக்கள் உண்டு.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு**

**077 684 5307**

(7940)


### ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை வழங்குவது தொடர்பில்

# ஐரோப்பாவிலிருந்து 5 பேர் கொண்ட குழு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது

(கொழும்பு)

ஐரோப்பிய பாராளுமன்றம், ஐரோப்பிய நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிக்கு மேலும் வரிச்சலுகைகளை வழங்க அனுமதிக்கும் மனித உரிமை பதிவுகளை இலங்கை அரசு பின்பற்றுகிறதா என்பதை ஆராய ஐந்து பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளது.

உயர்மட்ட குழு செப்ரெம்பர் 27ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதோடு, ஒக்ரோபர் 5ஆம் திகதி வரை இலங்கையில் தங்கயிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச உயர்மட்டம், தொழிற் சங்கங்கள், சிவில் சமூகம், முதலாளிகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளை குறித்த குழு சந்திக்க உள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்துவது உட்பட மனித உரிமைகளுக்கு தீங்கு விளைவிப்பதால் இலங்கைக்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை இரத்து செய்யும் யோசனை உள்ளடங்கிய தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஜூன் மாதம் நிறைவேற்றியது.

மனித மற்றும் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாட்டின் மகிந்த ராஜபக்ச நிர்வாகத்தால் செயற்படுத்தப்படாததால் பெரிய வரி2010 இல் முன்னுரிமை வரி சலுகையான (ஜிஎஸ்.பி பிளஸ்) இடைநிறுத்தப்பட்டது.

நல்லாட்சிஅரசாங்கம், மனித உரிமைகள் தொடர்பான 27 சர்வதேச உடன்படிக்கைகளை செயற்படுத்துவது குறித்த உத்தரவாதத்திற்கு அமைய, நம்பிக்கையின் அடிப்படையில், 2017 மே மாதம் ஜிஎஸ்.பிபிளஸ் மீண்டும் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றது. எனினும் இந்தசலுகையை இலங்கைக்கு தொடர்ந்து வழங்குவது குறித்து ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# கிளிநொச்சியில் உயிரிழந்த முதியவருக்கு தொற்று

கிளிநொச்சியில் உயிரிழந்த 70 வயது முதியவர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவருடைய பிசிஆர் மாதிரிகள் நேற்று யாழ் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

அதன்போதே அவருக்கு தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ம-03)


**31ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம் 22 04 1939

மறைவு 22 08 2021

அமரர்

**வடிவாம்பாள் பரராசசிங்கம்**

(வடிவக்கா)

*காலமெல்லாம் அரவணைத்து*
*அன்பு எனும் அமுதூட்டி*
*பாசமழை பொழிந்த எம் அன்னையே!*
*எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி*
*மீளாத் துயில் கொண்டதேனோ !*

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல நல்லூர் முருகப்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்னையின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாக ஆறுதல் கூறியவர்களுக்கும் மரணச் சடங்கில் உறுதுணையாக நின்று செயற்பட்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இன்று ( 21.09.2021 ) செவ்வாய்க் கிழமை நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வில் அனைவரையும் அழைக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

"சிவசக்தி வாசா"
கட்டைப்பிராய்,
கோப்பாய் தெற்கு.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(7305)



**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளை வடக்கு, வீமன்காமம் ( டச்சு றோட் ) பகுதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( தலா 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் )

பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை. (தரகர் தேவையில்லை)

**077 814 7389, 077 614 7333**

(7943)

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி தெற்கு, கரந்தன் பகுதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(14 அடிப் பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரம்)

பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை. (தரகர் தேவையில்லை)

**077 814 7389, 077 614 7333**

(7942)



**அவதானம்!**

**போலிக் காணிகள் விற்பனைக்கு!**

**யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்தி அருகில், முதலாம் ஒழுங்கை மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள எமது வயற்காணிகளிற்கு** சிலர் பாதை அமைத்தும் கம்பி வேலியிட்டும் சிறிது சிறிதாக பிரித்து தமது காணியெனக் கோரி, இங்கு வீடு கட்டலாம் எனவும் கூறி விற்க முயல்கின்றனர். இதற்கு எதிராக நாம் பொலிஸாரிடமும் சில குறிப்பிட்ட அதிகாரிகளிடமும் புகார் செய்துள்ளதுடன் நீதிமன்றத்தில் வழக்கும் பதிவுசெய்துள்ளோம். இவை யாவும் தற்போதைய கோவிட் - 19 சூழ்நிலையால் தாமதமடைந்து செல்கின்றது.

**அக்காணிகளை வாங்க முயல்வோர், சரியாக ஆவணங்களை உறுதி செய்தும் வயல் காணிகளில் இன்றுவரை வீடுகட்ட அனுமதியில்லை என்பதையும் அறிந்து செயற்படுங்கள்.**

தொடர்புகளுக்கு

Dr. நிமலன் - 076 366 6095
Dr. சஞ்சீவன் - 077 990 8034
Mr. கோபாலகிருஸ்னன் - 077 844 8179

ஒப்பம் :
வி. மணிவண்ணன் LL.B
சட்டத்தரணி

(7936)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.